உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௪] பராபவ௵ ஆவணி௴ [பகுதி-௧௦

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ பட்டர் வைபவம்:— | ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் | ௪௯௮ |
| தஞ்சை வாணன் கோவை:— | ஸ்ரீமத்-கோ. வேங்கோபராவ். | ௫௦௫ |
| "பொருட்பெண்டிர்" என்னுந் திருக்குறள். | ஸ்ரீமத்-அ. சண்முகம் பிள்ளை<br>ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் | ௫௦௯<br>௫௧௧ |
| பாண்டிய சாஸனங்கள்:— | ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M. A., | ௫௧௨ |
| பெரியபுராண அரும் பதவிளக்கம்:— | ஸ்ரீமத்-ஜி சதாசிவம் பிள்ளை. | ௫௧௭ |
| கடைவள்ளலார் காலம்:— | ஸ்ரீமத்-S. கிருஷ்ணசாமி ஐயங்கார், M. A., | ௫௨௨ |
| நல்லொழுக்கம்:— | ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். | ௫௩௧ |
| சிலகுறிப்புக்கள்:— | ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A., | ௫௩௮ |
| பிரதம வித்தியாப்பியாசப் பிரகடனம். | ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர். B. A., | ௫௪௩ |
| மஹாபாரதம்:— | ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப் பிள்ளை. | ௫௪௯ |
| பத்திராசிரியர் குறிப்புக்கள்:— | | ௫௫௮ |

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

உ

கடவுள்துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௪] பராபவ௵ ஆவணி௴ [பகுதி-௧௦.

## ஸ்ரீபட்டர்வைபவம்.

(௪௭௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் எழுதியது.]

இவ்வாறு பட்டர் தம்கொள்கையை நிலைநிறுத்தியதுகண்டு வேதாந்தி அதியாச்சரியப்பட்டு எழுந்துநின்று 'உம்மை மநுஷ்யமாத்ரமென்று எண்ணியிருந்தேன்; அங்ஙனன்று: நம்பெருமாளோடு உம்மோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்' என்று சொல்லிப் பரபரப்போடு பட்டர் திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு 'திருவுள்ள மிரங்கி அடியேனை ஆட்கொண்டருளவேணும்' என்று மிகவும் பிரார்த்தித்தார். பட்டர் தாம் வந்த காரியம் விரைவிலே எளிதிற் கைகூடியதனால் மனமகிழ்ந்து அவரை அங்கீகரித்து அவர்க்குப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பண்ணி மந்திரமந்திரார்த்தங்களை உபதேசித்து, பரப்ரஹ்மஸ்வரூபமும், ஜீவாத்மாவின் தன்மையும், ஜீவாத்மா பரமாத்மாவையடையும் உபாயமாகிற சரணாகதியும், அங்ஙனம் அடைதலின் பயனாகும் முத்தியினியல்பும், அச்சரணாகதிக்குப் பகையாகிற கர்மத்தின் நிலைமையும் என்று சகலவேத சாஸ்திரங்களிலும் சாரமாகச் சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தைப் பற்றிய ஞானத்தை அவர்க்கு உண்டாக்கி அவரைப் பாகவதோத்தமராகச் செய்து, அவரை நோக்கி 'நீர்ஸர்வஜ்ஞராயிருந்தீர்; ஆகையால், நான் உமக்குப்பரக்கச் சொல்லவேண்டியதில்லை; திருமகள் கொழுநனை திருமாலைச்சரணமடைந்து உய்ந்து இராமாநுஜதர்சநத்தை நிர்வகித்துக்கொண்டிரும்; இதுவரை வேதசாஸ்திரங்களையெல்லாம் அத்வைதபரமாக யோஜித்துத் தான்அவனாக நினைந்திருந்ததைவிட்டு, இனி அவற்றையெல்லாம் விசிஷ்டாத்வைதபரமாக யோஜித்துத்

தான் அவனுக்கு அடிமையென்று எண்ணிவாழக்கடவீர்' என்று அருளிச்செய்து ஆழ்வார்களருளிச்செயலான திவ்வியப் பிரபந்தங்களையெல்லாம் ஓதியுணரும்படியாகவும் நியமித்து 'இனி நாம் நம்பெருமாளைச் சேவிக்கப்போகிறோம்' என்று சொல்லிப்பிரயாணமானார்.

அவ்வளவிலே, முன்பு ஊருக்கு வெளியேநிறுத்திய பரிகரங்களெல்லாம் நிகழ்ந்தசெய்தியையுணர்ந்து ஊரினுள்ளே வந்துசேர்தலும், பட்டர் அணிகலங்கள் பலவற்றை அணிந்துகொண்டு பொற்பட்டாடையுடுத்து இரத்தினச்சிவிகையிலேறிக் குடைகொடிசாமரம் ஆலவட்ட முதலிய வரிசைகளுடனே வாத்தியங்கள் முழங்கத் திருச்சின்னம் பணிமாற மகாசம்பிரமத்தோடு புறப்பட்டபோது, வேதாந்தி பட்டருடைய பெருமையையும் செல்வச்சிறப்பையும் நன்றாகக்கண்டு குளிர நோக்கி 'இந்த ஸ்ரீமான் நாடும் மலையுங்கடந்து எனக்காக இவ்வளவு தூரம் எழுந்தருளி அடியேனை அங்கிகரித்தருள்வதே!' என்று அவருடைய கருணைத்திறத்தில் ஈடுபட்டுக் கண்ணுங்கண்ணீருமாய் அவர் திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு 'சௌந்தரிய சௌகுமாரியங்களையுடையரான தேவரீர் அகங்காரியாயிருந்த அடியேனை ஆட்கொள்ளுதற்காக இங்ஙனம் எளியபிக்ஷுகவேஷத்தைத் தரித்து எழுந்தருளிய சௌலப்பியத்தை நினைக்கநினைக்க எனக்குக் கிலேசம் பொறுக்கப்போகிறதில்லை' என்று சொல்லி நெடுந்தூரம் வழிவிட, பட்டர் அவரைத்தேற்றி நிறுத்தி 'பாகவதாராதனஞ் செய்துகொண்டிரும்' என்று சொல்லிப் பிரயாணப்பட்டு வரும்வழியிலே சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானை நிற்கச்செய்துவிட்டுத் திருவரங்கத்துக்கு எழுந்தருளுமளவில், அவ்விடத்து அடியார்கள் எதிர்கொண்டு 'வேதாந்தியை வென்ற விரகர் வந்தார்' என்று விருது கூற, கோயிலினுட்சென்று பெரிய பெருமாளைச் சேவித்துத் தம் திருமாளிகையிலெழுந்தருளிக் கரிசநிர்வாகஞ் செய்துகொண்டு இனிது வீற்றிருந்தனர்.

அப்பால் சிலகாலங்கழிந்தபின்னர் வேதாந்திகள் சம்சாரத்தில் வெறுப்புற்று வைராக்கிய மிகுதியால் துறவறமடையத் துணிந்து கங்கோரையைவிட்டுத் திருவரங்கத்தைக் குறித்துப் புறப்படுமளவில், இல்லறத்தை நீத்துச் செல்லலாகாதென்று சுற்றத்தவர் சூழ்

ந்துதகைய, வேதாந்திகள் தமக்கு உள்ள பெருஞ்செல்வத்தை மூன்றுகூறிட்டு இரண்டு கூறுகளைத் தம்மனைவியாரிருவருக்குங் கொடுத்து அவர்கள் தொடர்பை நிவிருத்திசெய்து மற்றொரு பகுதியைத்தமது ஆசாரியர்க்கென்று எடுத்துக்கொண்டு அவ்விடத்தைப் பற்றறவிட்டுச் சந்யாஸாச்ரமமடைந்து 'நிகமாந்தயோகி' என்று பெயர்பூண்டு கோயிலைநோக்கி யெழுந்தருளும்வழியிற் சிறுப்புற்றூரிலே அநந்தாழ்வானைக் கண்டு சேவித்துநிற்க, அவர் 'வேதாந்திகளே! சுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுது செய்து கிருகஸ்தாச்ரமத்திலேயே நின்று 'பட்டர் திருவடிகளே சரணம்' என்றிருந்தால், உம்மைப் பரமபதத்தினின்றுந் தள்ளிவிடுவாருண்டோ? இனி யாது செய்வது? மந்திரமந்திரார்த்தங்களினூன்றித் திருவரங்கநாதன் திருவடிக்குத்தொண்டுபூண்டொழுகிப் பட்டர் திருவுளத்துக்குப்பாங்காக நடந்து உய்யக்கடவீர்' என்று வாழ்த்தி விடைகொடுத்தருளினார்.

பிறகு வேதாந்திமுனிவர் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளிப் பட்டரைச் சேவித்துத் தாம்கொண்டு வந்த செல்வத்தைத் தமதென்ற அபிமானமின்றித் தம் ஆசாரியரான அவர்க்கே உரியதாம்படி அவர் திருவடிகளிற் சமர்ப்பித்துத் தொழுது நிற்க, இவரைக்கண்ட மாத்திரத்திலே பட்டர் மிகமகிழ்ந்து 'நம்முடைய சீயர் வந்தார்' என்று அணைத்துக்கொண்டு கொண்டாடினர்; ஆதலால், இவர்க்கு 'நஞ்சீயர்' என்று திருநாமமாயிற்று. *

அன்றைமுதலாக நஞ்சீயர் பட்டரைப் பிரியாமல் அடிமை செய்துகொண்டு அவர்திருவுள்ளத்துக்கு மேன்மேல் உகப்பை விளைக்க, பட்டரும் இவர்க்குச் சம்பிரதாய ரகசியார்த்தங்களை யெல்லாம் அருளிச்செய்து திருவாய்மொழிமுதலிய திவ்வியப் பிரபந்தங்களின் விசேஷார்த்தங்களையும் விவரிக்க, நஞ்சீயர் அவற்றை ஆதரத்துடன் கேட்டுத் தம் நன்னெஞ்சிற் பூரித்துக்கொண்டு அவர் சந்நிதியிலே இருந்தார்.

---

* சீயர் என்பதற்கு - சிங்கம்போன்றவரென்பது பொருள். சிங்கம் முதலிய சிலமொழிகள் ஆடவரில் தலைமையையுணர்த்துஞ் சொல்லாய் வழங்குதல் மரபு. உத்தம ஆச்சிரமமான சந்யாசத்தை யடைந்தவர்களைச் சீயரென்பது, சம்பிரதாய சங்கேதநாமம்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள், நஞ்சீயர் பட்டரை நோக்கி 'நம்பெரியபெருமாள் சந்திரபுஷ்கரிணிக் கரையிலே கண்வளர்ந்தருளுகிறதற்குத் திருவுள்ளக்கருத்து யாது?' என்று வினவ, அதற்குப் பட்டர், 'ஒருமுதலையின் வாய்ப்பட்ட கஜேந்திராழ்வான் ஆதிமூலமேயென்று கூப்பிட்டபின்பன்றோ எம்பெருமான் அந்த மடுவின் கரையிலெழுந்தருளி அதனைத்துயர் தீர்த்தருளியது? நான் ஐம்பொறிவாய்ப்பட்டுத்துயருற்று அங்ஙனங் கூப்பிடாத முன்னமே என்னைப்பாதுகாத்தருளுதற்காகவே, நாள்தோறும் நான் இறங்கி நீராடுகிற இப்பொய்கையின் கரையிற் பெருமான் எழுந்தருளி அறிதுயிலமர்கின்றானென்று நினைத்திருக்கிறேன்; நீர் இங்ஙனம் வினவியது உமது வசத்தினாலன்றுகாணும்; இதுவியாஜமாக எம்பெருமான் என் நினைவை வெளியிட்டருளினான் போலும்' என்று அருளிச்செய்தார்; என்றது, பகவான் செய்தருளுஞ் செயல்களெல்லாம் அவன் தனக்கு ஒரு பயனை நோக்கிச் செய்வனவல்லவாதலால், அவற்றை யெல்லாம் தம்மைப்போன்ற அடியார்களின் பொருட்டாகவே செய்வனவாகக்கொள்வர் ஞானநலமுடையவரென்றவாறு. "அகமகிழுந்தொண்டர் வாழ அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன்" * என்று குலசேகராழ்வார் அருளிச்செய்ததும் காணத்தக்கது.

ஒருசமயத்தில் நஞ்சீயர் பட்டரை நோக்கி 'சருவேச்வரனைச் சரணமடைந்தால் அவன் பயனளிக்கிறான்; பிராட்டியைப் புருஷகாரமாகப்பற்ற வேண்டுகிறதென்?' என்று வினவ, பட்டர் "நம் திருவுடையடிகள்தம் நலங்கழல் வணங்கி †" என்றவிடத்து 'பிராட்டி முன்னாகப் பெருமானை அடையவேணும்' என்று ஆழ்வார் அருளிச்செய்தது கண்டிரோ? ஒருவன் எம்பெருமானை ஆசிரயிக்கப்புக்கால் அப்பொழுது அவன்குற்றம்பாராமல் அவனைத் தன் நிழலிலேவைத்துச்சமயமறிந்து எம்பெருமான் திருமுன்பேகொண்டுவிட்டு இவன் குற்றத்தைப் பொறுப்பிப்பதற்குப் பிராட்டி புருஷகாரம் இன்றியமையாததாலால், அவள் முன்னாகவே பற்றவேணும்' என்று விடையளித்தருளினார்.

---

* பெருமாள் திருமொழி-முதல் திருப்பதிகம்-கµ.

† திருவாய்மொழி-மூன்றாந்திருப்பதிகம்-அ.

"முந்தை வினையகல முன்னருளு மாரியனால்
எந்தை யெதிராச னின்னருள்சேர்ந்து— அந்தமில்சீர்ப்
பொற்பாவை தன்னருளாற் பொன்னரங்கர் தாள்பணிந்து
நற்பா லடைந்துய்ந்தேன் நான்"

என்ற விவரணமாலையும்,

"செய்யவளைக்குருவின்னருளால்திருத்தாள்வணங்கிச்
செய்யவளைக்குலஞ்சூழரங்கேசன்சிறிதமுது
செய்யவளைக்கும்புலிக்குமங்காந்தசெவ்வாய்முகுந்தன்
செய்யவளைக்குஞ்சிலம்பணிபாதங்கள்சேர்ந்தனமே"

என்ற திருவரங்கத்தந்தாதியும் இக்கருத்துப் பற்றியனவே.

நஞ்சீயர்முதலிய அடியார்கள் பலருடனே பட்டர் பெரியதிருவோலக்கமாக வீற்றிருந்து திருவாய்மொழிவியாக்கியானம் உபந்யசிக்கிறபோது "என்னீர்மைகண்டிரங்கியிதுதகாதென்னாத, என்னிலமுகில் வண்ணற்கு" * என்றஇடம் வந்தவளவிலே, ஒருதமிழ்ப்புலவர் 'தலைவன், தலைவியைப் பிரியாதிருக்கிறநிலையில் அவள் வருந்தாளாதலாலும், அவன் அவளைப்பிரிந்திருக்கிறபொழுது அவள்படும் வருத்தத்தை அவன்காணவகையில்லையாகையாலும், 'என்னீர்மைகண்டிரங்கி' என்றல் பொருந்துமோ?' 'என்னீர்மைகேட்டிரங்கி' என்றலன்றோ பொருந்துவது?' என்று ஆக்ஷேபிக்க, அதற்குப்பட்டர் 'அணைத்தகை நெகிழ்ந்தவளவிலே தலைவியின்உடம்பு நிறம்மாறிவெளுத்ததன்மையைக் கண்டால், தலைவன், இவளைத் தான் பிரியத்தகாதென்று நினைக்கவேண்டாவோ?

† 'புல்லிக்கிடந்தேன்புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள்வற்றேபசப்பு" என்றும்,

‡ "ஊருண்கேணியுண்டுறைத்தொக்க
பாசியற்றேபசலைகாதலர்
தொடுவுழித்தொடுவுழிநீங்கி
விடுவுழிவிடுவுழிப்பரத்தலானே" என்றும்

* நான்காந்திருப்பதிகம்—௪.

† திருக்குறள் --பசப்புறுபருவரல் -எ. (தலைவர்பிரிந்து அணுகியிருக்கவும் நீபிரிவுத்துயரைப்பொறுக்கின்றிலையென்ற தோழிக்குத் தலைவிமுன்னைநிகழ்ச்சி சொல்லியது.)

‡ குறுந்தொகை—௩௯௯. (தலைமகன் வரைவுநீட்டித்தவிடத்துத்தலைமகள் தோழிக்குச்சொல்லியது. பரணர்.)

உள்ள தமிழ்வழக்குக்களை அறியீரோ?" என்று விடைகூறி அந்தச்சங்கையை நீக்கியருளினார். * பிறகு

† "பரிவதில்ஈசனைப்பாடி
விரிவதுமேவலுறுவீர்
பிரிவகையின்றிநன்னீர்தூய்
புரிவதுவும்புகைபூவே"

என்றபாசுரத்துக்குப் பட்டர் வியாக்கியானம் உபந்யசிக்கும்போது, 'அகிற்புகை கருமுகைப்பூ என்றாற்போல விசேஷித்துச் சொல்லாமையால், எந்தப்புகையைக் கொண்டாயினும் எந்தப்பூவைக் கொண்டாயினும் எம்பெருமான் திருவடிகளில் அடிமை செய்தாலும் அவன் அதனை அங்கீகரித்தருள்வன்' என்று அருளிச்செய்து, மற்றும் அதன்விவரணமாக 'சருகையிட்டுப் புகைத்துத் தூபம்சமர்ப்பிக்கவும் அமையும்; கண்டங்கத்தரிப் பூவையிட்டு அருச்சிக்கவும் அமையும்' என்று சொன்னவளவிலே, நஞ்சீயர் "ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்" என்று கண்டங்கத்தரிப்பூவைப் பகவதர்ச்சனைக்கு உதவாததாகச் சாஸ்திரம் விலக்கியிருப்பதற்குக் கருத்துத் தான் என்னோ?' என்றுகேட்க, பட்டர் 'அதன்கருத்து, அவனுக்கு ஆகாதென்கிறதன்று; ஆவலோடு சென்றுபறிக்கிற அடியவர்கையிலே முள் தைக்குமென்பது பற்றியே தவிர்த்தது காணும்;

‡ "கள்ளார்துழாயுங் கணவலருங் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால்
புள்ளாயோ ரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
உள்ளாதாருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே"

என்ற பெரியதிருமொழிப்பாசுரத்தில் திருத்துழாயோடு காகணம்பூவோடு வில்வதளத்தோடு தாமரைமலரோடு ஆம்பற்பூவோடு ஒருவாசி

* "குடிபுறங்காத்தோம்புஞ்செங்கோலான்வியன்றானை
விடுவழிவிடுவழிச்சென்றாங்கவர்
தொடுவழித்தொடுவழிநீங்கின்றாற்பசப்பே"
என்றகலித்தொகையும் (நெய்தற்கலி—கரு) காணத்தக்கது.

† திருவாய்மொழி-ஆறாந்திருப்பதிகம்-க.

‡ நூற்றெட்டாந்திருப்பதிகம்-சு.

யற அனைத்தையும் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கையாலே, அர்ச்சிக்கிற உபகரணம் பிரதாநமன்று; அர்ச்சிக்கிறவனது அன்பே முக்கியம்; அன்பில்லாதவன் இடில் திருத்துழாயும் ஆகாது; அன்புடனே இடின் காகணப்பூவும் ஆகும்என்பது விளங்குகின்றதன்றோ? இங்ஙனமன்றியே, அப்பிராகிருதவஸ்துவான பரமாத்மாவின் அருச்சனைக்கு ஏற்றதொரு பிராகிருதவஸ்துவும் உண்டோ?' என்று சொல்லியருளினார்.

பின்னர், * "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்" என்ற பாசுரத்துக்குப் பட்டர் வியாக்கியானம் உபந்யசிக்கிறபோது, 'உலகத்திற் காண்கிற ஆண் பெண் அலி என்னும் இம்மூன்றின் படியுமன்றானால் அவ்வஸ்து சூந்யமோ?" என்று தமிழ்ப்புலவரொருவர் ஆக்ஷேபிக்க, அதற்குப்பட்டர் ' இலக்கணவழக்கை அறிந்ததில்லையோ? 'ஆணல்லது பெண்ணல்லது அல்லா அலியு மல்லது' என்று சொல்லவில்லையே; 'ஆணல்லன்பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்' என்று அன்மையைத் துணிந்தபொருளின்மேலேற்றி ஆழ்வார் அருளிச்செய்தவகையினாலேயே, உலகத்திற் காணப்படுகிற ஆணின் தன்மையனுமல்லன், பெண்ணின் தன்மையனுமல்லன், அலியின் தன்மையனுமல்லன்; ஸ்த்ரீ புந்நபும்ஸகாதிஸர்வவஸ்து விலக்ஷணன் புருஷோத்தமன் என்றகருத்து விளங்கவில்லையோ'? என்றுவிடையிறுத்தருளினார். இது

† "தன்மை சுட்டலுமுரித்தெனமொழிப
அன்மைக்கிளவிவேறிடத்தான"

‡ "மெய்தெரிபொருண்மேலன்மையும் விளம்புப"

என்றாற்போன்ற தமிழிலக்கணமுறையைத் திருவுள்ளம்பற்றியுரைத்தவாறாம். பிறகுபட்டர்,

§ "பிறந்தவாறும்வளர்ந்தவாறும்பெரியபாரதங்கைசெய்தைவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச்செய்துபோனமாயங்களும்

---

* திருவாய்மொழி—பதினோந்தாந்திருப்பதிகம்—௧௦.
† தொல்காப்பியம்—சொல்லதிகாரம்-கிளவியாக்கம்.
‡ நன்னூல்—பொதுவியல்-௨௫.
§ திருவாய்மொழி—ஐம்பதாந்திருப்பதிகம்-௧.

*நிறந்தனூடுபுக்கெனதாவியைநின்றுநின்றுருக்கியுண்கின்றவிச்*
*சிறந்தவான்சுடரேயுன்னையென்றுகொல்சேர்வதுவே"]*

என்றபாசுரத்துக்கு வியாக்கியானம் உபந்யசிக்கும்போது, 'ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்திலே மிகவும் ஈடுபட்டிருப்பர்கள்; இதற்கு ஏதுஎன்?' என்று நஞ்சீயர்கேட்க, அதற்குப்பட்டர் 'ஒருவன் ஒரு பொருளையிழந்து பலநாள் ஆய்விட்டால், அதனை இழந்தோமென்றதுன்பம் அவனை அவ்வளவாக வருத்துவதில்லை; அவன்தானே சிலநாளைக்குமுன் ஒருபொருளையிழந்திருப்பானாயின் அவனால் அத்துன்பம் பொறுக்கமுடிவதில்லை. அவ்வாறே, மற்றையவதாரங்கள் ஆழ்வார்களவதரிப்பதற்கு நெடுநாளைக்குமுன்னமே நிகழ்ந்துமுடிந்தனவாக, கிருஷ்ணாவதாரமோ, இவர்கள் தோன்றுவதற்குச் சிறிது முன்னாக நிகழ்ந்ததாதலால், கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போயிற்றே யென்று, கண்ணபிரானைத் தாம் காணாமற்போனதைக் குறித்து இரங்கியீடுபடுவார்கள். அன்றியும் மற்றை அவதாரங்கள் போலன்றி இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் பூர்ணாவதாரமாக, அவற்றுள் 'இராமாவதாரத்திலே, தந்தையோ இந்திராதி தேவர்களை வென்றிட்ட சம்பராசுரனைச்சங்காரஞ்செய்த ஏகவீரனான தசரதசக்கரவர்த்தி; இராமன் முதலியமைந்தர்கள் நால்வருமோ ஆண்புலிகள்; தங்கள் குணங்களால் நாட்டாரனைவரையும் தம்வசப்படுத்தியவர்கள்; பிறந்தகுலமோ கொடும்பகைஞரை வேரறுக்கின்ற இக்ஷ்வாகுகுலம்; மந்திரிகள் வசிஷ்டர்முதலிய பெரியோர்; ஊர் அயோத்தியை; காலம் நல்லகாலமாகிய திரேதாயுகம்; ஆகையால், அவ்வவதாரத்தைக்குறித்து அடியார்கள் அஞ்சிப்பரியவேண்டுவதில்லை. கிருஷ்ணாவதாரத்திலே, பெற்றதந்தையோ சாதுவான ஒருகிழவன்; வளர்த்தவனும் வயோதிகனான ஓரிடையன்; பிறந்த இடம்-பழம்பகையான கொடியகம்ஸனுடைய சிறைக்கூடம்; வளருமிடமான கோகுலபிருந்தாவனங்களில் எழும்பூண்டுகளும்முட்பட அசுரமயமாயிருக்கும்; கண்ணனோ துடுக்கன்; சிறிதும் பின்வாங்காது பாம்பின்வாயிலும் விழுந்துணிவுடையான்; வளர்ந்த குலமோ இடைக்குலம்: காலமோ கலியுகத்தோடு தொடர்ச்சியுடையதுவாபரயுகாந்தம்: இங்ஙனமாகுமிடத்து, பரிவுடையார் கிருஷ்ணாவதாரத்தைக்குறித்து அஞ்சியீடுபடாதிருக்கவிரகுண்டோ?' என்று திருவாய்மலர்ந்தருளினர்.

(இன்னும்வரும்.)

# தஞ்சைவாணன்கோவை.

வரோதயன், சந்திரன் என்னும் மறுநாமங்கள் பூண்ட தஞ்சை வாணனைப்புகழ்ந்து இக்கோவையைப் பொய்யாமொழிப்புலவர்பாடியிருக்கிறார். இதற்குக் குன்றத்தூர் அஷ்டாவதானம் சொக்கப்பநாவலர் ஓர்உரையியற்றியுள்ளார். இக்கோவையை, சொற்சுவை பொருட் சுவைமுதலியவற்றில் வாதவூரடிகளின் திருச்சிற்றம்பலக்கோவையாருக்கு இரண்டாவதாகக்கூறுவது வழக்கம்.

இக்கோவைநாயகன் மதுரைக்கடுத்த தஞ்சாக்கூர் என்னுமிடத்தரசாண்ட சிற்றரசனென்றும், மதுரை, திருநெல்வேலிகளையாண்ட பாண்டியர்களுக்கு மந்திரியாயும் சாமந்தனாயுமிருந்தவனென்றும் இவன் பெயராலும் இவனைப்பற்றி ஆங்காங்குச் சொல்லியிருத்தலாலும் தெரியவருகிறது. இவன் வாணவம்சத்தான். இந்தவம்சத்துமுன்னோர்கள் கி. பி. 5-வது நூற்றாண்டுமுதல் "வடுகவழிமேற்கு"ப் பாகத்தையாண்டுவந்தார்கள். இவ்வாணவம்சத்தார், தாம் மகாபலிசக்கரவர்த்தியின் பெயரனான பாணாசுரன்வழித்தோன்றியவரென்றும், பரமேச்சுவரனால் தன்வாயில்காப்பாளராக்கப் பெற்றவரென்றும், தம்மெய்க்கீர்த்தியில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவ்வம்சத்தவளே மணிமேகலையிற்கூறியுள்ள பெருநற்கிள்ளியின்மனைவி சீர்த்தி என்பாள். இவர்கள் முதன்முதல் பல்லவர்களிடம் சிற்றரசர்களாயிருந்து அவர்கள் சார்வபௌமங்குன்றச் சோழசக்கரவர்த்திகள் கீழானார்கள். இது 10-வது நூற்றாண்டின் முற்பகுதியில் பராந்தகன் காலத்து நேர்ந்தது. பராந்தகன் (I.) வாணிருவரைத்தோல்வியடைவித்து அவர்நாட்டைக்கங்கவம்சத்தானான பிருதிவிபதி II.க்குக் கொடுத்தான் என்பது சரித்திரசித்தமான விஷயம். இக்காலத்து, இவர்கள் நாடு பெரும்பாணப்பாடி என்றே பெயர்கூறப்பட்டுவந்தது. அது இப்பொழுது வடஆர்க்காடு தென்ஆர்க்காடு ஜில்லாக்களிற் சிலபாகங்களடங்கியநாடு. இன்னும் சில நூற்றாண்டுகளில், (அதாவது 11-12-வது நூற்றாண்டுகளில்) பாண்டியர்பிரதாபம் பெருக, சோழர்கள் சார்வபௌமத்துவங்குறைந்து சோழபாண்டியர்

களுக்குட்பட்டு ஓர்விதமாய்ச் சிற்றரசர்பதவியை யடைந்தார்கள். அப்பொழுது இவ்வாணர்முதலிய சோழர்கீழாண்டசிற்றரசர் பாண்டியர்க்குக் கீழ்ப்படிந்தார்கள். அக்காலத்து வந்த வாணர்களில் ஒருவன் மதுரைக்கடுத்த தஞ்சாக்கூரையோ, திருமாலிருஞ்சோலையையோ தனக்குப் பிரதானபட்டினமாகக்கொண்டு ஒருவம்சத்தை நாட்டியிருக்கவேண்டும். ஏனெனில் சகநூற்றாண்டு 16-ஆவதில் மதுரைப் பக்கத்து அரசாண்ட ஓர்மாவலிவாணாதிராயனது சாஸனங்களிற்சில திருக்கானப்பேரிலும், திருப்புல்லாணியிலும், நவபாஷாணமென்கிற தேவிபட்டினத்திலும் மற்றுஞ்சிலவிடங்களிலும் காணப்படுகின்றன. இவனுக்கு முன்னமே இப்பிரதேசத்தில் ஓர்வாணாதிராயனிருந்தானென்றும், அவன் பெரியஜீயரென்று புகழ்படைத்த மணவாளமாமுனிகளைச் சார்ந்து தொண்டுபூண்டு அவர்க்கு முத்தரையன் என்னும் ஓர் ஊரைத் தானஞ்செய்தானென்றும் அதனையவர் அழகியமணவாளநல்லூர் என்று பழம்பெயர்நீக்கிப்புதுப்பெயரிந்தாரென்றும் பிள்ளைலோகஞ்சீயர் "யதீந்திரப்ரவணதீபிகை"யில் எழுதியிருக்கிறார். இக்காலத்தில் சூணாம்பேட்டை ஜமீந்தார்வம்சத்தவர்கள் தம்பெயரோடு வாணாதிராயர் என்னும் பட்டப்பெயரைச்சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுகேள்வி. இவர்களும் மாவலிவம்சத்தாரென்பது கொள்கையோ தெரியவில்லை.

தஞ்சைவாணன் கோவையில் இப்பிரபுவை, 'வையைநாடன்' "வழுதியர்நாமம் வளர்க்கின்ற வாணன்" "மீனவர்தஞ் செங்கோன் முறைமைசெலுத்திய வாணன்" "மாவலிவாணன்" "[1]மல்லையம்போர் வென்றவாணன்" "வல்லத்தமர்வென்றவாணன்" "தென்னன்தன்னைப்பணிந்து குற்றேவல் செய்யாது சமர்க்கெழுந்த மன்னைப் புறங்கண்டவாணன்" "கன்னடர்மண்கொண்ட வாணன்" "வேளாண்மரபு விளக்கியவாணன்" என்று பலவாறாகப்புகழ்ந்திருப்பதுடன் இவன் சோழர்கள் மனதில் பயமுண்டுபண்ணத்தக்கவனென்றும், சேரனைவென்றவனென்றும் கூறியிருக்கிறது. இவற்றால் பாண்டிநாடு கன்னடர் கைவசமாயிருந்ததென்றும், அவர்கள் பலங்குறைந்தோ

1 மூலத்தில் 'மாவல்வாணன்' என்றிருக்கிறது. இதை மாவலிவாணனென்று இவ்விடத்துத் திருத்திஎழுதியிருக்கிறது.

மற்றெவ்வாற்றானே இவ்வாணன் அவர்களிடமிருந்து நாட்டை மீட்டுக்கொண்டானென்றுந் தெரியவருகிறது. ஆயின், விஜயநகரத்தரசர்கள் பிராபல்லியங்குன்றத்தொடங்கிய சதாசிவதேவமகாராயர் காலத்தவனாயிருக்கலாம் என்று தோன்றுகிறது; "தென்னன் தன்னைப் பணிந்து குற்றேவல் செய்யாது சமர்க்கெழுந்த மன்னன்" என்பது வேணாட்டுத் திருவடியைக் குறிக்கிறதாகக் காண்கிறது. இவ்வரசன் பாண்டியர்களோடு எதிர்த்து சுயேச்சையடைந்து ஆண்டுவந்தானென்று கேள்வியுற்றுச் சதாசிவதேவமகாராயர் தண்டெடுத்துச்சென்று அவனையடக்கி அப்பாண்டியனையும் ஸ்திரராஜ்யஞ்செய்யப் பண்ணிவந்தார் என்பது சரித்திரவாராய்ச்சியிற்கண்ட உண்மை. இதே காலத்தரசாண்ட அபிராமனென்னும் வீரபாண்டியனும் சேரரோடுவல்லத்து ஓர் யுத்தஞ்செய்தானென்று,

> "பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
> கொற்ற முயர்க்குமறங் கூருமே—விற்றுவசம்
> வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
> வல்லமெறிந் தானேந்து வாள்"[1]

என்னுந்தென்காசிச்சாஸனத்தால் தெரியவருகிறது. இவ்வீரபாண்டியன் கி. பி. 1588-ல் பட்டந்தரித்தவனென்று இச்சாஸனத்தின் மற்றோர்பகுதிகூறுகிறது. தஞ்சைவாணன்கோவையில் குறித்துள்ளவல்லத்துப்போரும், இச்சாஸனத்துபோரும் ஒன்றெனலாமென்று தோன்றுகிறது. அப்படியாயின் தஞ்சைவாணன்காலம் கி. பி. 16-ம் நூற்றாண்டின் கடைக்காலமாகும். ஆதலால் இவனைப்பாடிய பொய்யாமொழிப்புலவரும் இக்காலத்திற்குப் பிற்பட்டவரென்பது கூறவேண்டியதில்லை.

பொய்யாமொழிப்புலவர் செங்காட்டங்கோட்டத்துறையூர் என்னுமிடத்தார் என்று 'தமிழ்நாவலர்சரிதை' யில் அடியில்வரைந்துள்ளபாட்டால் விளங்குகிறது:—

> பொதியிலகத்தியனைப்பொய்யாமொழியா
> யதிக(வமண்பாக்கிழானைத்)—துதிபெருகு
> செங்காட்டுக்கோட்டத்துறையூரெனுந்தலத்துச்
> சங்காத்தங்கொண்டிருப்பாய்தான்.

---

1 செந்தமிழ் "சிலபாண்டியசாஸனங்கள்"—பகுதி 3, தொகுதி 4, பக்கம் 120.

இதில் இரண்டாமடியின்பாடம் கொஞ்சஞ் சிதைந்துள்ளது. இச்சிதைந்துள்ளபகுதியை ஒருவாறு "அமணப்பாக்கிழான்" அல்லது "அமண் (ப்) பாக்கிழான்" என்றுகொண்டால் இப்பொய்யாமொழியாருக்கு அமண்பாக்கிழான் என்னும் மறுபேருண்டு என்று நினைக்கவேண்டியிருக்கிறது. பின்னும் இவர் ஆரூரில் சிற்றரசுபுரிந்தவனெனச் சொல்லப்படும் சீநக்கன் என்பவன் காலத்தாரென்று மேற்படி சரிதையின் கீழிரண்டுபாக்களால் தெரிகிறது.

அன்றுநீசெல்லக்கடவென்றுயாருயிர்விட்
டின்றுநீவாழுலகமெய்திறய்—வென்றிதிகழ்
மாநக்க பூண்முலையார் மாரனே தென்னாரூர்ச்
சீநக்கா செல்லக் கட.

அளிகொளுந்தொடையணரசக்குமரன்
ஒளிகொள்சீநக்கனின்றுவந்திட்டசீர்ப்
புளியஞ்சோறுமென்புந்தியிற்செந்தமிழ்
தெளியும்போதெலாந்தித்தியாநிற்குமே.

பொய்யாமொழியார் "சீநக்கனுக்குப் பாடிக்கொடுத்த வெண்பா" என்னுந்தலைப்பின் கீழ் அடியில்வரும் வெண்பாவைப் பாடினதாகத் தமிழ்நாவலர்சரிதை கூறுகிறது.

நிறையின் முறைகொணர்ந்து தேவமெல்லாமீன்ற
(வி)றையுமிறைகிடக்கலாகா வகைநகழற்காற்
போர்வேந்தர்போர்மாளப்போர்வாளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத்தெரு.

தஞ்சைத்தெருவைப்பாடும் இப்பாட்டால் இவர்தஞ்சைவாணன்கோவைபாடியவர் என்பதுதோன்றும். இப்பொய்யாமொழிப் புலவர் கி. பி. 17-வது நூற்றாண்டினரென்று ஊகிக்கப்பட்டது. ஆயின், சிந்தாமணி நச்சினார்க்கினியர் உரைப்பாயிரத்தில் "வண்பெருவஞ்சிப் பொய்யாமொழிபுகழ் மையறு காட்சித் திருத்தகுமுனிவன் கருத்திதுவென்ன" எனவருதலால் பொய்யாமொழிப்புலவர் நச்சினார்க்கினியார்க்குமுற்பட்டவரென்று ஏற்படும். நச்சினார்க்கினியார் கி. பி. 11-வது நூற்றாண்டினர் என்று ஸ்ரீமாந் T. S. குப்பு

சாமிசாஸ்திரியாரும் காலஞ்சென்ற ஸ்ரீமாந் சேஷகிரிசாஸ்திரியாரும் எண்ணுகிறார்கள். அப்படியாயின் நச்சினார்க்கினியத்திற் கூறியுள்ள பொய்யாமொழியார் தஞ்சைவாணன்கோவைசெய்தாரினும் வேறு வர்.

நீலகிரி, 5-ஆகஸ்டு 1906. } கோ. வெங்கோபராவ், அஸிஸ்டண்டு எபிகிராபிஸ்டு.

---

## "பொருட்பெண்டிர்" என்னுந்திருக்குறள்.

### I

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

இப்பாட்டுக்குப் பரிமேலழகருரையினைமறுத்து ஸ்ரீமாந்-மாதவையரவர்கள் எழுதியபுத்துரையும், ஸ்ரீமத்-பத்திராசிரியரெழுதியகுறிப்பும்படித்தேன். அவற்றுட் பரிமேலழகருரையே வள்ளுவனார்கருத்தெனவரைந்த பத்திராசிரியர்குறிப்பொடுசார்ந்து சில எழுதத் துணிந்தேன். பிணங்களுக்கு விவாகமும் நந்தியழிவும் அக்காலத்து இரகசியமாகவோ அல்லது வெளிப்படையாகவோ நடந்ததெனற்கு ஐயரவர்கள் நூற்பிரமாணங்காட்டலரிது. அங்ஙனங்காட்டினும் பொருள்கருதிப் பிணந்தழுவச்செல்வானுக்கு அப்பிணம் இன்னான் மகள் இன்னாளெனத் தெரியக்கூடுமாகலானும், தெரியின் ஏதில்பிணமாகாமையானும், அப்பிணவிவாகத்தை இரகசியமாகச் செய்யக்கருதினும் தனியறையேயமைதலால் இருட்டறை வேண்டுமென்பது நியமமாகாமையானும், பிணத்தை விசேஷிக்கின்ற 'இருட்டறை' 'ஏதில்' என்னும் அடைகள் ஐயரவர்கள் கூறிய மலைநாட்டுவழக்கை மறுக்கின்றன. ஐயரவர்கள் பரிமேலழகருரையிற் கொண்ட ஐயங்கள் மூன்று: அவற்றுள் முதலாவது, கூலிக்குப் பிணமெடுப்பார் உற்சாகத்தொடு சுமத்தலன்றி அருவருத்தலில்லையென்பது. அவ்வுற்சாகம் பொருள்கருதிப் புறத்தே காணப்படினும் ஏதில் பிணத்தைத் தழுவுங்கால் அகத்தே அருவருப்புண்மை இயல்பு. அகத்து மில்

லயெனின் அவ்வாறே பொருட்பெண்டிரும் மிகப்பல உபசாரத்தொடு பிணமெடுப்பாரிற் பன்மடங்கு உற்சாகம் புறத்தேகாட்டலின் அவரும் அகத்தில் அருவரார் எனக்கொள்ளல் வேண்டும். இவ்வாற்றால் கூலிகருதி உற்சாகத்தொடு தழுவினும் ஏதில்பிணமாதலின் அன்பின்மை கண்கூடாம்.

இரண்டாவது, பிணம் இருட்டறையிற் கிடத்தலும் ஆங்குச் சென்று கூலிக்குப் பிணமெடுத்தலும் இல்லையென்பது. அரசனால் இருட்டறைச்சிறையிடப்பட்டாருட்சிலர் ஆங்குத்தானே யிறத்தலும் அநாதைகளிற் சிலர் பொதுமண்டபங்களிற்றங்கலும் ஆங்கு இருட்டறையிருப்பின் அதன்கணிறந்து கிடத்தலும் உலகியல்பே.

மூன்றாவது, இராப்பிணங்கிடந்தால் விளக்குண்டென்பதும் கூலிக்குச்சுமத்தலேயன்றித் தழுவுதலில்லையென்பதும், ஏதில் பிணத்தை வெளியேற்றிச் செய்வனசெய்தலே இல்லறத்தார்க்குக் கடனாதலின் ஆங்கு விளக்குவைத்தல் வேண்டுமென்பதும் சுற்றத்தாரைத் தேடிக்கொணர்ந்து அவரால் எடுப்பித்து ஆசந்தி சேர்க்கவேண்டுமென்பதும் இருவகைவழக்கினும் நியமமில்லை.

இனி, இப்பாட்டில் என்னறிவிற்கெட்டியவாறு சிலவிசேடமும் எழுதுகின்றேன்: ஒக்குமேற்கொள்க. வரைவின்மகளிர், காதற்பரத்தையர்சேரிப்பரத்தையர் என இருவகையராகலானும், அவருள் காதற்பரத்தையர் பொருள்கருதாது காதல்கருதி அன்பொடுமுயங்குவராகலானும் அவரைவிலக்கற்பொருட்டு பரத்தையரென்றாற்போலப் பொதுப்பெயர்கூறாது பொருட்பெண்டிரென்றார். எல்லாப் பொருட்பெண்டிர்முயக்கமும் பொய்ம்மை எனல் கூடாமையானும், காமநூல் வல்லுநரை முயங்கிய பொருட்பெண்டிருட்சிலரது முயக்கம் மெய்ம்மையாதலுங் கூடுமாதலானும், பரவையார் பொருட்பெண்டிராயினும் அவரது முயக்கம் பொய்ம்மையாகாமையானும், 'பிணந்தழீஇயற்று,' என்ற உவமையானே முயக்கத்தின் பொய்ம்மையுணரக்கிடப்பினும் அப்பெண்டிருட்சில்லோரது மெய்ம்மை முயக்கத்தை விலக்கற்பொருட்டுப் பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்கமென்றார். அவர் பொருள்கருதிப் புறத்தே அன்புடையார்போன்று தழுவினும்

அகத்தின்கண் அன்பிலரெனற்குப் பிறிதொன்றுவமைகூறின் அது சிலர்க்குவிருப்பும் சிலர்க்குவெறுப்புமாக முடியுமன்றி எல்லார்க்கும் வெறுப்பாதலின்மையானும் 'என்பெற்ற தாயரும் என்னைப்பிணமென்றெறிந்துவிட்டார்' ரென்பதனாற் பெற்றதாயும் பிணத்தை விரும்பாளென்பது பெறப்படலானும் எல்லாரும் வெறுத்தற் பாலதாய பிணத்தையேயுவமைகூறினார். அப்பிணத்தைத் தாய்முதலாய பிறரெல்லாம் விரும்பாவிடினும் கற்புடையாள் வெறுப்பின்றி அன்பொடு தழுவிச் சககமனஞ் செய்தலுண்மையின் அதனை நீக்கற் பொருட்டு ஏதில்பிணமென்றார். ஏதில் பிணமாயினும் காட்டிற் கிடக்குமேல் நாய் நரி கழுகு முதலாயின உணவு கருதி விருப்பொடு தழுவுமாதலின் அதனைவிலக்கி அவை தழுவற்கியலாத பிணமென்றுணர்த்தற் பொருட்டு அறையிற்பிணமென்றார். அறையிற்பிணமாயினும் ஏதில் பிணமாயினும் வடிவுகண்டுழிக்காமமிக்குழின் அத்தினிமாதருட்சிலர் விருப்பொடுதழுவலுங்கூடுமாகலின் அவர் வடிவு கண்டு மயங்கற்கேதுவாகிய ஒளியை விலக்கற்பொருட்டு இருட்டறையில் ஏதில் பிணமென்றார்.

அ. சண்முகன்,
சோழவந்தான்.

## II

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில், ஏதில் பிணந்தழீஇ யற்று" என்னும் குறளில் ஏதில் பிணந்தழுவுதலைப்பெண்டுகளின்செயலாக அமைக்கலாமென ஒருவாறு தோற்றுகின்றது. அது வருமாறு:—பெண்டுகள் பிணத்தைச் சூழ்ந்திருந்து பிணத்தின்மீது வீழ்ந்துஅழுகை இத்தமிழ்நாட்டின் வழக்கமாக ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே உற்றார் அப்பிணத்தின்மீது வீழ்ந்தழுகையில் பிரிவாற்றாமையால் அப்பிணத்தை அருவருப்பின்றி இறுக அணைத்துக்கோடலும், அயலார் அப்பிணத்தின் மீது ஊரொப்பனைக்காக வீழ்ந்தழுகையில் அருவருப்புடன் அப்பிணத்தைத் தழுவுதலும் இயல்பு.

"இருட்டறையில்" என்பதால், அருவருப்பினால் தன்

கண்ணால் நோக்காமையும் தன் அருவருப்பைப் பிறர் அறியாமையும் விளங்குகின்றன. இவ்வாறு பொருள்கோடலும் ஒன்று. இதுவன்றி,

"இருட்டறையில் ஏதில் பிணம்" என்பதை அநாதப்பிரேதம் எனப் பொருள்கொண்டு அநாதப்பிரேதசம்ஸ்காரத்தை விசேடபுண்ணியமாகக்கொண்டோர் அக்கிரியையில் உலகவழக்கின்படி ரோதனத்தை ஓர் அங்கமாகக்கொண்டு அதன்பொருட்டுப் பணத்தையாவது (மார்படித்த கூலி மடிமேலென்றபடி) உணவுப்பதார்த்தங்களையாவது கூலியாகக்கொடுக்கப்பெற்றுக் கொண்டு ரோதனம்புரியும் பெண்டுகள் அப்பிணத்தின்மீது வீழ்ந்து தழுவுங்கால் நிகழும் அருவருப்பு இக்குறளில் விளக்கப்பட்டிருக்கலாம்.

இக்குறட்குப் பொருள்விரித்த பிரம்மஸ்ரீ மாதவையர் அவர்களும், இப்பத்திராசிரியரவர்களும் தாங்கள் கொண்ட விசேடக்கருத்துக்களோடு மேற்குறித்தஉரைகளையும் ஓர்புறத்தே வைத்தல் தகுமா? என்பதைச் சிந்திப்பாராக.

இலக்குமணப்போற்றி.

---

# பாண்டிய சாஸனங்கள்.

[ஸ்ரீ. து. அ. கோபிநாதராயரவர்கள் எழுதியது.]

(௩௯௬-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

---

## அதேயிடத்து மூன்றாந் தம்பம்.

1. [illegible]—
2. [illegible]—
3. [illegible]—
4. [illegible]
5. [illegible] [1*]
6. [illegible]—
7. [illegible]—
8. [illegible]—
9. [illegible] [ஃ*]॥—

## அதேயிடத்தின் நாலாம் தம்பம்-

1. [illegible]—
2. [illegible]—
3. [illegible]—
4. [illegible]—
5. [illegible]—
6. [illegible]—
7. [illegible] [1*] [illegible]—
8. [illegible]—
9. [illegible]—
10. [illegible]—
11. [illegible] ॥—

---

## திருப்புட்குழிசாஸனம்.

(I) திருப்புட்குழி விஜயராகவன் கோயில் மகாமண்டபத்து கீழண்டையில் எழுதியுள்ளது:—

வாழ்க கோயில்பொன்மேய்ந்தமகிபதி
வாழ்க செந்தமிழ்மாலைதெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையுங்கொண்டவன்
வாழ்க சுந்தரமன்னவன் தென்னனே—

## (II) திருப்புட்குழி விஜயராகவன் கோயில் மகாமண்டபத்து கீழண்டை சுவரில் எழுதியுள்ளது.

[illegible] [ா] [illegible]
[illegible] [॥]
[illegible]
[illegible] [॥]

## ஜடாவர்ம்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி.

பூமலர்வளர் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப
நாமலர்வளர் கலைவஞ்சி நலமிருமா மனத்துறையச்
சிமையவரைத் திரள்மடந்தை திருத்தோளின் மிசைவாழ
விமையவர்கோ னன்றிட்ட வெழிலாரங் கழுத்திலங்கப்
பநிரதிபோல் தூய்யபுகட் படர்வல்லி கொழுந்தோட்டத்
திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவத்
தண்டா..............ணிக்கவிகை தெண்டிரைசூழ் பார்நிழற்ற
வெங்கோபக் கலிகடிந்து செங்கோலெண் டிசைநடப்பச்
செம்புராசின்முகில்முழங்கச் சிலையகன்றுவிசும்படைய
திறற்புலிபோய் வனமடையக்
கயலிரண்டு நெடுஞ்சிகரக் கனவரையின் விளையாட
வொருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்
தருமறையோ ரைவ்வேள்வி யாறங்க முடன்சிறப்ப
வருந்தமிழு மாரியமு மறுசமையத் தறநெறியுந்
திருந்துகின்ற பனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்கக்
குச்சரரு மாரியரும் கோசலருங் கொங்கணரும்
வச்சிரருங் காசிபமொத் தாரு.. ...மனருஞ் சோனகரும்
வந்தியருமுதலாய, விருநிலமா முடிவேந்த ரிறைஞ்சிநின்று
(வ) டி நெடுவாளும் வயப்பெரும் புரவியுந் [திறைகாட்ட,
தொடிநெடுந் தோளுமே துணையெனச் சென்று
சேரனுந் தானையுஞ் செருக்களத் தொழிய
வாரசும் புலரா மலைநாடு நூறப்
பருமா மரபிற் பொருதிறல் மிக்க
சென்னியைத் திறைகொண்டு திண்டோள் வலியிற்
பொன்னி நாட்டுப் போசலத் தரைசர்
களைப்புரி......டைத்துப் பொங்கு வீரப்புரவியுஞ்
செருவிறல் ஆண்மை சிங்கணன் முதலாய
தண்டத் தலைவருந் தானையு மழிபடத்
துண்டித் தளவில் சோரி வெங்கலிப்
பெரும்பிணக் குன்ற மிருங்கன் னிறைத்துப்

பருந்துங் காகமும் பாறுங்....................
அருந்தி மகிழ்ந்தால் அமர்க்கள மெடுப்பக்
கம்........ளையுங்களைப் பரவியுஞ் செம்பொற்
குவையுந் திகழ்கதிர் மணியு மடந்தைய
ரார மார்பு முடன்கவர்ந் தருளி
முதுகிடு போசளன் றன்னொடு முனையுமது
தவறென் றன்னை பொற் பெற்றி கட.........து
போனுட் பகையாய் நின்ற
சேரனைக் கொன்று சின............ளிருந்தருளி
நண்ணுதல் பிறரா லெண்ணுதற் கரிய
கண்ணனூற் கொப்பத்தைக் கைக்கொண் டருளிப்
பொன்னி சூழ்செல் வப்புன னாட்டைக்
கன்னி நாடெனக் காத்தருள் செய்யப்
பெருவரை யானிற் பின்னகருக் காக்கிய
கருநட ராசனைக் களிறுதிறை கொண்டு
துலங்கொளி மணியுஞ் சூழ் வேழமு
மிலங்கை காவலனை யிறைகொண் டருளி
வருதிறை மறுத்தங் கவனைப் பிடித்துக்
கருமுகில் நிகளங் காலிற் கோத்து
வேந்தர் கண் டறியா விற்றிண் புரிசைச்
சேந்த மங்கலச் செழும்பதி முற்றிப்
பல்லவ னடுங்கப் பலபோ ராடி
நெல்விளை நாடு நெடும்பெரும் பொன்னும்
பருமயானையும் பரியு முதலிய
வாசுரிமை கைக்கொண் டரசவற் களித்துத்
தில்லையம் பலத்துத் திருநடம் பயிலுந்
தொல்லை யிறைவர் துலைக்கழல் வணங்கிக்
குளிர்பொழில் புடைசூழ் கோழிமான் காளி
செறிவேம் பிணணி மலர் கலந்த
தொங்கல் வாகைத் தொடைகள் சூட்டித்
திங்களுயர் மரபு திகழுவந் திருந்த

தன்.........சையா னன்னிலை விசையம்
பிண்ண.........ன்னகைகலேதே ரின்மொழிப் பாவலர்
மண்ணின்மே லூழி வாழ்கென (வாழ்)த்தக்
கண்டவர் மனமுங் கண்ணுங் களிப்ப
வெண்டிரை மகர வேலையி னெடுவரை
யாயிரம் பணைப்பணத் தநந்தன் மீமிசைப்
பாயல் கொள்ளும் பரமஞ்......கத்
தொருபெருங் கடவு ளுவந்தினி துறையு
மீபெருங் காவிரி யிடைநிலத் திலங்குந்
திருவரங்கம் பெருஞ் செல்வம் சிறப்பப்
பன்முறை மணிதுலா பார மேறிப்
பொன்மலை யென்னப் பொலிந்து தோன்றவும்
பொன்மேய்ந் தருளிய செம்பொற் கோயிலுள்
வளர்திகழ் மாலுதைய வெற்பனைத்
திருவளர் குலமணி சிங்கா சனமிசை
ம......தலையென மகிழ்ந்தினி தெறிந்தி
நகமேரா தயமெனச் செழுங்கதிர் சொரியும்
கனக மாமுடி கவின்பெறச் சூடிப்
பாரான் வேந்த ருரிமை யரிவைய
ரிருமருங்கு நின்று விரிபெருங் கவரியின்
மந்த வாடையு மலையத் தென்றலு
மந்தளிற் கரங்கொண் டசைய வீச
வொரு பொழு தும்விடா துடனிருந் துமகிழும்
திருமக ளென்னத் திருத்தோள் மேவி
யொத்த முடிசூடி யுயர்பே ராணை
திக்கெட்டு நடப்ப செழுந்தவஞ் செய்த
விவன்போ லுலகிலே வீரன் பலபத்திர மதி முகத்தவணியாம
களிலகு கொடிகாதல் முகுழ்த்து நின்றேத்து முலகுமுழுதமு
டையாளோடும் வீற்றிருந்தருளிய ஸ்ரீ கோச்சடைபன்மரான
திரிபுவனச்சக்கர வத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு
யாண்டு—

---

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

(௪௪௭-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டினின்று எடுத்தெழுதியது.]

---

## இயற்பகைநாயனார்புராணம்.

(௧) வளத்தையுடைய புகார் என்னுங்காவிரிப்பூம்பட்டினம், தவளச்சத்திரத்தையுடைய பெருமைபொருந்திய அநபாய சோழ மகாராஜாவினது அழகிய வம்மிசம் கீர்த்தியைப் பெருக்கிய சிறப்பினையுடைய நிலைபெற்ற பழைய புகழ்பொருந்திய நீர்வளஞ்செறிந்த மருதநாட்டிலுள்ள வயல்கள் வளத்தைத்தர, நல்ல காவிரிநதியானது இயல்போடு நீரைக்கொடுத்து, எஞ்சியநீர்பாய்தலால், சமுத்திரத்தையுஞ் சுத்தமாக்குகின்ற ஒப்பற்றநல்ல நெடிய காவிரிசங்கமமென்னுந் தீர்த்தத்தை முன்னமே பெற்றுடைய நலத்தினாற்சிறந்தது. சென்னி-சோழன். சிரசின்மேல தவளச்சத்திர முயர்ந்த அநபாயனென்னுமாம். காவிரிசங்கமம்-காவிரிசமுத்திரத்தோடுகூடுவது.

(௨) அந்த மேன்மைபொருந்திய நகரத்தில் முதன்மைபொருந்திய குடியிலவதரித்த வைசியர், அளவிறந்த செல்வவளத்தினமைதியையுடையவர். படியில் விளங்க. உலக இயலுக்குப்பகையாயுள்ளவர். உலகியலுக்குப்பகை மனைவியைக்கொடுத்தது.

(௩) கங்கையைச்சூடிய சிவபெருமானது மெய்ம்மையாகிய அடிமையையுடைய அளவிறந்த மனத்திற்நிறைந்த அன்பினால் விபூதியணிந்த திருமேனியையுடைய அடியார்கள் மனத்தில் நினைத்த எவைகளையும் அவரெண்ணப்படிமுடித்து, உவமையற்ற நல்வழியில் விளங்குகின்ற இல்லாச்சிரமத்தை நடத்துகின்றமகிழ்ச்சியால்வந்தபேறெல்லாம் அச்சிவனடியாரேவின பணியைச்செய்யும் பெருமையேயென்று அதனைப்பாதுகாத்துவாழுநாளில்; அடிமையானது அளவிறந்த மனத்தால் நிறைந்த அன்பாலெனினுமமையும்.

(௪) நுண்ணறிவோர் ஆராயும் நுண்பொருளாகியும் ஆன்மாக்களீடேறும்படி வெளியாகக் கனகசபையினின்றாடுகின்ற சிவபெருமான் உமாதேவிக்கும் (பின்சொல்லப்படும்) அந்தெரியவோ எக்

காலத்தும் பிரியாத அவருக்குத் தெரியாமையோ அதனையாமறியேம்.

(ரு) எங்கண்போன்றமுனிவர் : என்றலைவராகிய முனிவர்: என்கோ-என்பேனோ எனினுமமையும்.

(அ) இவ்வடியார் கேட்ட இது எனக்கு முன்றொட்டுள்ளதொன்றே. அதனையே எம்பிரான்வேண்டி எனக்குத்தந்த பேறிஃதென்று. என்னிடத்துள்ள பொருளொன்றை விரும்பிக்கேட்டமையால் அங்ஙனங்கேட்டமை எம்பெருமான்றந்தபேறேயாம்; இல்லாததொன்றைக்கேட்டால் யாது செய்யலாம் என்பது கருத்து.

(கூ) மனைவியார் தன்றனிப்பெருங்கணவரைவணங்க (இயற்பகைநாயனார் தாம்அம்மனைவியாரைச்சிவபெருமானுக்குக் கொடுத்தமையான் அம்மனைவியார் இனிச்சிவனடியாருடைய மனைவியேயாமென்று கருதி, அம்மனைவியாரைத்) தொண்டராகிய இயற்பகைநாயனார் எதிரேவீழ்ந்து வணங்க, அவ்வியற்பகைநாயனாருடைய மனக்கருத்தையறிந்த மனைவியாரும் பின்புசென்று சிவனடியாரையே தமது நாயகராகக்கொண்டு சேவடிபணிந்து (இதுகற்புக்குவிரோதமாதலின்) திகைத்துநின்றாரென்க.

(கய) நின்றது-தாமதித்துநின்றது.

(கஉ) துன்னிருளை நீளிடைப்பட முன்கூடிநிலத்திடை வெட்டிவீழ்த்த மனமொருப்படுவாராய், இருபுயங்களுமேதுணையாக சிங்கவேற்றையொத்த இயற்பகையார் அவ்விருவரையும் முன்னே போகவிட்டுத் தாம் பின்னேபோனார். நேர்தல்-உடன்படல்:—

(கங) போவதாமொருவனென்றுஒருவன்போகலாமா என்று

(கச) அண்டிவந்தெனமுடிக்க.

(கரு) வழிவிடுந்துணையாகிய இயற்பகைநாயனார் பின்னேசெல்ல, தொன்றுதொட்டெல்லோர்க்கும் வழித்துணையாயுள்ள அந்தணராகிய சிவபெருமான் இயற்பகைநாயனாரது மனைவிக்கு மிகமேலான விருப்பத்தைக்காட்டி. அழிதகன் - கெட்டபாவத்தையுடையவன்; தூர்த்தனென்றதாம்.

(கசு) மாதுதாமிப்பொழுது சிவனடியார் மனைவியாயினமை யால் இயற்பகைநாயனாரை அந்நியராக வைத்து இயற்பகை வெல்லு மென்று பெயரெடுத்துக்கூறினாரென்க.

(கஎ) பரிபவம்-அவமானம். என்வாளினாலே கூறுபடுத்தப் பட்டுத் துடிப்பீர். துணிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலமாயிற்று.

(கஅ) நகையையும்-நகைக்கும். பாடவமுரைப்பது-சாமர்த் தியம் பேசுவது. பனவன்-பிராமணன்.

(உ0) இயற்பகைநாயனார் எதிர்த்தெழுந்தபோது, சுற்றத்தார் அவ்வியற்பகைநாயனாரை எதிராதவராய்ப் பெற்றமூர்ந்தவர் இப் போது ஊராது கையிலைக்கொண்டு படிமேற்செல்ல. முன்கையிலைக் கொண்டு பெற்ற மூர்ந்தவர், இப்போது இத்தையலைக் கொண்டிருந் தும் பெற்றமூராது படிமேற்செல்ல என்பது கருத்து.

(உக) புலிப்போத்து.

(உச) ஆடுறுசெயல்-போராடுஞ்செயல். ஆடு வெற்றியுமாம். நெடியவாளுந்தாமுமாகநின்றவர் தனியேநின்றார்.

(உரு) விடுவேனென்று-வழிவிடுவேனென்று.

(உசு) ஏழை நடுவாகப்போகும் போதில் என்பதுகருத்து. திருச்சாய்க்காடென்னுந்தலம். திரு-லீலக்குமி, அழகுநிறைந்த என்றுமாம்.

(உஎ) தன்என்றது இயற்பகையை.

(உஅ) திரும்பிப்பாராதவனாய்.

(உகூ) அயர்ப்பு-மறவி. ஓலிட்டு-ஓலிட.

(கூ0) பிழைத்தவர்-குற்றஞ்செய்தவர். வாளிலிழைத்தவரா கின்றார்-வாளால் வெட்டுண்டவராகின்றார். சுயரூபங்கொள்ளும்படி மறைந்தார்.

(கூஉ) இன்னதைச் சொல்லித்துதித்தல் வேண்டுமென்பதை

யறியேன். இப்பொழுது அடியேனுக்கு முன்வெளிப்பட்டருளியதிருவுருவந்துதிக்கப்படுவது.

(௩-௩) விடையவரானவர் அடியாராகிய இயற்பகையாரைப் பார்த்து இவ்வுலகில் நன்குமதிக்க. எண்ணியஎன்பது வினையெச்சம். நம்பின்நண்ணிய உன்மனைவியோடு நம்முடன்வாவென்று அடியார் தம்மைப்போதுக என்றுகூட்டுதலுமொன்று.

(௩-௪) தோற்றம்-அழகு.

(௩-௫) உடனுறைபெருமை சாமீபம்.

(௩-௬) இளசை-ஒரூரின்பெயர்.

---

## இளையான்குடிமாறநாயனார்புராணம்.

(௨) ஏரால் நிரம்பும்வளத்தால் வருகின்ற அளவிறந்த ஒப்பற்ற செல்வத்தையும். மற்றவை செல்வமுஞ் சிந்தையும்.

(௩) என்பை ஆரமாகப்புனைந்தஐயர். எப்பொழுதுமுண்டாகின்ற பத்திமிக. மதுரப்பதம்-இன்சொல்.

(௪) அறுசுவைத்திறத்தனவாகிய நால்வகைஉண்டிகளை.

(௫) வறுமைப்பதம்-வறுமைநிலை.

(௭) இளைசைப்பதிக்குமன்னனாகிய மன்னன். தன்னைவிற்றுமிறுக்க வேண்டிய கடன்கள். மாறல்-விற்றல். முன்னையினும்பார்க்க.

(௮) பெற்றஊர்வதுமின்றிநீடிய பேதையாளொடுமின்றினைப்பாடங்கொள்க.

(௯) மழைக்காலத்திரவினில் நெடுநேரம் பட்டினியிருந்து ஓர் உதவியுமின்றிப் பசிமேற்படல் அதிகரித்துக் கதவடைத்தபின்பு மணம்பொருந்திய மாலையையுடைய நாயனார் விருந்தினரை யெதிர்கொண்டார். எங்ஙனங்கொண்டாரெனில் எனவிறுவையெழுப்புக.

(௧0) ஈரத்தைத்திருமேனியினின்றும் நீக்கி இருத்தற்கிடங்கொடுத்து, செய்வதென்னென்றுமுற்கூறி.

(கக) அணங்கேயென்றுபிற்கூற.

(கஉ) ஏதிலார்-அயலவர். வைகல்-கழிதல்.

(கங) செல்லல்-வறுமை. நீர்முளை-நீரிலுள்ளமுளை. நீங்க ஆக்கலுயாருமெனக்கூட்டுக.

(கரு) மிகுகின்ற முகிலானது விளங்க மழையைச் சொரிதலால், வழியின் பக்கமும் நடுவுமறிதற்கரிய இராக்காலமானது கருகுகின்ற கரிய இருளின்கூட்டம் நெகிழ்ந்து. (இளகி) உலகெங்கும் உருகுதலையொத்தது. கங்குல் தான்போன்றதெனக்கூட்டுக.

(கசு) இவ்வுலகத்தவர்யாவரும் அஞ்சும்படிவெளிப்படவேண்டிவரில் எங்கள் நிறம் மிக்கமைக்குழம்பாய்விடு மென்றுகருதி வெளிப்படாத நடுவிருள்யாமத்து. துண்ணெனும்படி வண்ணம் மைக்குழம்பு ஆகும் எனக்கூட்டுக.

(கஎ) மனத்தையன்புகொண்டு செலுத்த. இடா-இறைகூடை. நெல்லைக்கொள்ளும்படி தலையிலேகவிழ்த்து. குறி-பழைய குறிப்பு.

(கசு) அலக்கு-சலாகை.

(உ0) முளையான விதை பதமாக முன்னம் வறுத்து; முன்வார்த்து வைத்திருந்த உலை.

(உக) பசியினாலே லுயபனழிவுறும். பாசப்பழிமுதல்-பாசத்தின் பழியைத்தருமுதலை.

(உஉ) கைம்மைவினை - கைத்தொழில். பண்டைநினைவினாற் குறையை நேர்ந்து-குறையான பதார்த்தங்களையெல்லாம் பழையநினைப்பால் நிரப்பி. குறையாவன நெய், தயிர், பாயசம், வடை, பொரிக்கறி முதலியன. இவைகளைப் பாவனையால் நிரப்பிஎன்பது கருத்து.

(உங) கறியுமமுதும்; கறியாகிய அமுதுமாம். ஈண்ட-நன்றாக, விரைவாக.

(உரு) வடிவு-திருமேனி. பூசை-மாகேசுரபூசை.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

ஸ்ரீ:

# கடைவள்ளலார் காலம்.

(௪அரு-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பங்களூர் ஸெண்ட்ரல் காலேஜ் போதகாசிரியர்

ஸ்ரீ: எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் M. A., எழுதியது.

பத்தினி தேவிக்கு ஆலயம் சமைத்துப் பெருவேள்வி விளைத்த காலத்து அவ்வேள்விக்கண் வந்திருந்த மன்னர்களில் கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தன் ஒருவன். இக்கயவாகுவும் மதுரையில் இளஞ்செழியனும் உறையூரிற்கிள்ளியும் பத்தினிக்கடவுளுக்கு ஆலயம் நிருமித்தனராதலின், இக்கயவாகு அப்பெயர்கொண்ட இருவருள் முதல்வனோ இரண்டாவனோ என்று விமரிசைப்படுத்தவேண்டும். மகாவம்சத்தின் பிரகாரம் முதற்கயவாகு கி. பி. 113-முதல் 135-வரை இலங்கை முழுதும் ஒருவனேயாகி ஆண்டவன். இரண்டாவன் இலங்கைமன்னர் மூவருள் ஒருவனாய் 1142-முதல் 1164-வரையாண்டவன். டாக்டர் ஹீல்ஷ் அவர்கள், ஸ்ரீமாந்-குமாரஸாமி அவர்களை உட்பிரமாணத்தால் இக்கயவாகு முதல்வனே என்பதைநிலைநிறுத்த வேண்டினரன்றோ? அவருடைய மாறுகோளின் மற்றப்பாகமாகிய கிள்ளியின் கதைக்கு வெகுகாலஞ்சென்று அவன்விஷயமாய் எழுதின சிலரோ கற்பனைக்காரராவாரென்பது இதுவரை தெளிவிக்கப்பட்டிருப்பதுந்தவிர கோவலன் புதுமணம்புரிந்து இல்வாழ்க்கைபுகுங்காற் புகாரிலாண்டவன் கரிகாலன் என்பதற்கும் இவ்வரசன் மகள் சேரவரசன் இல்லக்கிழத்தியாயிருந்திருக்கக்கூடுமென்பதற்கு மியன்ற சான்றுகளைப் புகட்டியுள்ளாம். கஜபாகுவின்விஷயமாய் ஆராயப்புகுவார் இக்கயவாகு இரண்டாவனென்றே கொண்டால் இதுவரையும் நமக்குத்தெரிந்திருக்கிற அக்காலத்திய தென்னிந்தியசரித்திரத்திற்குச் சிறிது மிணங்காதாகும். எவ்வாறேனெனின் கி. பி. 12-ம் நூற்றாண்டினிடையில் தென்னிந்தியவரசர்களும் அவர்கள் நாட்டின் பாகுபாடும் பின்வருமியற்கையவாகும். அக்காலத்திய சோழவரசர்கள் விக்கிரமசோழனோ அல்லது இரண்டாங்குலோத்துங்கனோ இருந்திருத்தல் வேண்டும். மதுரையில் வீரஅல்லது விக்கிரமபாண்டியர்கள் இருந்திருத்தல் வேண்டும். சேரதேசத்தில் வீரகேரளவர்

மனும் வீரரவிவர்மனுமாயிருந்திருத்தல் வேண்டும். அக்காலம் மைசூர் தேயத்தையாண்டவர் போச்சலவிஷ்ணுவர்த்தனனும் அவன் மகன் நரசிம்மனுமாகல் வேண்டும். அப்போது காஞ்சிச் சோழராஜதானிகளில் மைசூர்க்கருகில் அக்காலத்திற்குச் சிறிது முன்னதாய் அதிகமான் என்பவன் ஒருவன் இருந்ததாகக் காணப்படுகிறது ; ஆயின் அவன் விஷ்ணுவர்த்தனனுடைய சிறப்புற்றதளகர்த்தனாகிய காவிரிகடந்தோடப்பட்ட தலைக்காட்டிலிருந்த சோழமகாமண்டலேசுவரனேயன்றித் தகடூர்க்குச் சம்பந்தப்பட்டவனல்லன். சிலப்பதிகாரத்தில் "குடகக்கொங்கருமாளுவவேந்தரும்" என்றதற்கேற்ப கொங்குராசாக்கள் யாருமிருந்ததாகத் தெரியவில்லை. எல்லாம் இப்படிநிற்க, கயவாகுவென்பான் தன்னூரைவிட்டுப் பேராற்றுத் துறைமுகத்ததாய் இக்காலத்துக்கொடுங்கலூரென்று வழங்கும் வஞ்சிக்கு வரும் நிலைமையிலிருந்தனனல்லன். கஜபாகு தன்னயலாரான மாணாபரணன், பாக்கிரமபாகுவென்போருடன் போர்புரிந்து அவர்களால் அழிவுபெறாமல் நிலைபெறும் அருமுயற்சியிலேயேயிருந்தனனென்று இலங்கைச்சரிதம் செப்பும். மேலும் இக்காலத்திய சேரவரசவீடு கொல்லமென்றே வழங்கப்படுகிறது.

முதற்கயவாகுவோவென்றால் தன்தகப்பன் காலத்தில் சோழர் படையெடுத்து வந்து சிறைகொண்டுபோய்ச் சோழதேசத்துக் "காவிரிநகர்க்கண்" அடிமைப்படுத்தப்பெற்றிருந்த இலங்கையர் மீட்சிக்காகப் படையெடுத்துப்போய் அவர்களால் முன்னமே கொண்டு போகப்பட்ட பௌத்தபாத்திரத்தையும் இன்னுஞ்சில பௌத்தஞாபகவஸ்துக்களையும் கொணர்ந்தனனென்று மகாவம்சம் கூறும். ராஜரத்நாகரியோவென்றால் இச்செய்திகளையேகூறுமிடத்து இலங்கையர் தமக்குத்தாமே "காவிரிநதிக்குச்" சென்றவரென்று புகலும். [இங்கு காவிரிநதியென்றது ராஜரத்நாகரிபெழுதுங்கால் காவிரிமுகத்தில் பட்டினமிருந்தது மறைந்தமையைப் புலப்படுத்தும்.] இப்படையெழுச்சியினின்றுமீளுங்காற் கயவாகு அநேகம் தமிழரைக்கொணர்ந்து இலங்கையிற் குடியேற்றினனென்றுங் கூறும். ராஜாவளி இச்செய்திகளையின்னும் விரிவுசெய்கிறது. அதில் இவ்வரசன் பெயர் ராஜபாகுவென்று காணப்படுகிறது. (எழுத்துப்பிழையினாற்

போலும்.) இவன் வழக்கம் போல் இராத்திரியில் ஊர்ப்புறஞ்சுற்றுங்கால் சோழராஜ்ஜியத்திற் சிறைப்பட்டிருந்த தன்னிருமக்களிழப்பேகாரணமாக ஒரு கைம்மையழுவதைக்கேட்டான். இவ்வழுகைக்குக்காரணம், அதிகாரிகளால் அறியப்படாமற் போகவே அவளையே அழைப்பித்து அவளிடமிருந்து சோழராஷ்டிரத்தரசன் இலங்கைமேற்படையெடுத்து மீண்டபோது பன்னீராயிரம் குடிகளைக்கொண்டு மீண்டனன் என்னும் செய்தியைத் தான் அறிந்தான். இதற்குப்பின் மகாவம்சத்திலும் ராஜரத்நாகரியிலும் உரைக்கப்பெற்றுள்ள செய்திகளையெல்லாம் செப்பி இவன் சோழதேசத்தினின்று மீளுங்கால் பத்தினிதேவியின் சிலம்புகளையும் இன்னும் தெய்வங்களின் நான்குகைகளையும் கொணர்ந்ததாக ராஜாவளி சொல்லும். இப்பத்தினிதேவி பத்தினிக்கடவுள் என்று மாறுபெயர்பெற்ற சிலப்பதிகாரநாயகியாகிய கண்ணகியென்பதற்கையமில்லை. இவள் சிலம்பு அக்காலத்து அற்புதமான விலையிடவொண்ணாத ஞாபகவஸ்துவாய்ப்பாராட்டப்பெற்றிருத்தல் வேண்டும்; ஏனெனில், அக்காலத்தில் இத்தகைய ஞாபக வஸ்துக்கள் வெகுஉயர்வாகக்கொண்டாடப்பட்டவையென்று முன்னமே சொல்லியுள்ளாம். பௌத்தமதத்துப் பெருங்கொள்கைகளிலொன்றாகிய பூர்வஜன்மரகசியங்களையெல்லாம் வரையாமல் அளிக்கும் ஓரற்புதமானபாத்திரம் மணிமேகலை மணிபல்லவத்திற்பெற்றதாய்ச் செப்பியிருத்தலின் கஜபாகு இத்தகைய பாத்திரமொன்று எடுத்துச்சென்றானென்று சொல்வதில் அசம்பாவித மொன்றுமில்லை. மணிமேகலையில் ஒரு புத்த பீடிகைக்காக இரண்டுநாகவரசர்கள் போர் புரிந்தாரெனவும் செப்பியுளது. இச்செய்திகளையெல்லாம் இலங்கைத்தேயசரிதங்கள் கஜபாகுவின் மேலேற்றிக்கூறும்; ஆயின் இப்பத்தினிதேவியைப்பற்றிய குறிப்பு பழஞ்சரித்திரங்களிற்காணாமை பல்லோரும் பரிதபிக்கத்தக்கதே. ஆயினும் இச்சரிதங்களிற் பழையனவும் புதியனவும் எல்லாம் இதற்கு முன்னிருந்த நூல்களினின்றும் தொன்றுதொட்டாண்டுவந்தகதைகளினின்றுமே கூட்டியெழுதப்பட்டவை. இவ்விஷயமாய், இவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அபாம்மகான் கீழ்வருமாறு புகன்றுள்ளார். "பழம்பிரதிகளுக்கும் புதுப்பிரதிகளுக்கும் வேறுபாடு வெகு

சின்மைத்தாயிருக்கும்படி வெகுஜாக்கிரதையோடு இச்சரிதங்களின் மூலம் தொன்றுதொட்டு வந்திருக்கிறது." "ராஜாவளியென்பது அவ்வத்தல சரிதங்களினின்றும் பல்லோராலியற்றப்பெற்றுள்ளது. முற்சொல்லப்பட்ட இரண்டு நூல்களும் (மகாவம்சம், ராஜரத்நாகரி) தொடர்ச்சியாய் இலங்கைச்சரிதத்தை போர்ச்சுகல் தேசத்தவருக்குமவர்க்கெதிராளிகளான உலாந்தருக்கும் உண்டான போர்களின் முடிவு வரைக்கும் சரித்திரத்தைக் கொண்டுபோகின்றன."

ஆதலால் தொன்றுதொட்டு ஆன்றோரால் ஆளப்பெற்ற பழங்கதைகளும் இவ்விருபெருங்காப்பியங்கட்கிணங்கிய சரித்திர சந்தர்ப்பங்களும் செங்குட்டுவச் சேரன் பெருவேள்விவேட்டகாலத்து இலங்கையரசன் முதற் கயவாகுவே யென்பதைக்குறிக்க, ராஜாவளி சரித்திரவாராய்ச்சியில் நம்பத்தகுந்ததேயாயின், இக்கொள்கைவற்புறும். இஃதிற்றேயாயினும் பிறசான்றோர் சிலர் கொள்ளுமாறு மேற்கண்ட செய்திகளை இரண்டாங்கயவாகுவுடனிணக்குவதற்குச் சிறிதும்காரணந்தோற்றவில்லை.

ஆயின் முதற்கயவாகுவின்காலம் யாதோ எனின் மகாவம்சம் கி. பி. 113—135என்று கூறும். இதனுடைய இக்காலவரையறையின் உண்மையெற்றேயாயினும் இப்பெயர் பெற்ற இவன்பின்னேன் காலந தவறுகக் கொள்ளவிடமில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டினிடைப் பருவத்தில் இககவிகள் பெருமை இருந்து செழித்தனர் என்று கொள்வதற்குத்தக்க சான்றுகள் முன்னமேயே காண்பித்துள்ளாம். காலஞ்சென்றகனவான் ஸ்ரீபத்-சுநதாம் பிள்ளையவர்களால் எட்டாம் நூற்றாண்டில் வதிந்தவரென்று கொள்ளப்பெற்ற சுந்தரமூர்த்திநாயனர் "கொடுக்கிலாதானைப்பாரியே யென்று கூறினுங்கொடுப்பாரில்லை" யென்று விளம்பினாராதலாலும் இப்பெருங்காப்பியங்கள் பௌத்தமதம் உன்னத நிலையில் நிறவியதைக் குறிப்பதாலும் இக்கவிவாணர் காலம் அந்நூற்றாண்டுஎன்றுகொள்ளவியலாது. ஜெனரல்கன்னிங்காம் என்பவர் கொள்கைக்கேற்ப புத்தநிர்வாணம் கி. மு. 543-ல் அன்று. 477-லேயே என்று தேர்ந்தாலும் முதற்கயவாகுவின் ஆட்சிக்காலம் கி. பி. 179—201ஆகும். மகாவம்சத்தில் வரைந்துள்ள பூர்வகால

வரையறை அபத்தமென்று நிலைநிறுத்தப் பெறுமளவும் இக்காலவரையறையேநிலையாகக் கொள்ளவேண்டும். ஏனெனில் ப்ரொபெஸர் ரேஸ்டெவிட்ஸ் அவர்கள் சஞ்சி முதலான விடங்களில் அகப்பட்ட சிலாலிகிதங்களுக்கும் மகாவம்சத்துக்குமுள்ள ஒற்றுமையை அவரெழுதிய பௌத்தஇந்தியா என்னும் புத்தகத்தில் 200—299, 300-ம் புடங்களில் தெரிவிப்பதனால், தமிழ் மிகச்சிறப்புற்றோங்கிய காலம் சற்றேனும் கிறிஸ்தாப்தம் இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகட்கு பின்னிறுத்தவொண்ணாதென்பது திண்ணம். கிறிஸ்துகாலத்திற்கு முன்னமே வெகுதரம் இலங்கைமேற்படையெடுத்துச் சென்று கி. மு. முதல் நூற்றாண்டினிடையிலேயே அத்தீவையாண்டவர்களாகிய தமிழர் செருக்குக்கு இது முழுதுமிணங்கும். இச்செய்திகளையும் ஐந்துகிரேக்கவரசர்களுடன் தமிழரை ஒருங்கு படுத்திக்கூறிய அசோகசக்கரவர்த்தி சாசனத்தையும ஒருங்கு நோக்கின் இத்தமிழருடைய உயர்ந்த நாகரிகம் வெகுபண்டைக்காலத்ததென்று கொள்ளவிடங்கொடுக்கும்.

இக்கயவாகுவென்பான்தவிர தமிழருக்கு நட்புப்பூண்ட சிலரையும் வெம்மைகொண்ட சிலரையும் சிலப்பதிகாரத்தில் காணலாம். செங்குட்டுவனுக்கு நட்புப்பூண்டு அவன் பாலகுமாரன் மக்களாகிய கனகவிசயரைக் கண்டிக்க வடதிசைப்போந்த அந்நாள் கங்கையைக் கடத்தற்கு நாவாய் உதவிய நண்பர் "நூற்றுவர் கன்னர்." இக்கனகவிசயர்க்குதவி புரிந்தவர்,

"உத்தரன்விசித்திரனுருத்திரன்பைரவன்
சித்திரன்சிங்கனதனுத்தரன்சுவேதன்"

என்பார். ஸ்ரீமது கனகசபைப்பிள்ளையவர்கள் நூற்றுவர்கன்னர் என்பதை மச்சபுராணத்திற்காணும் சாதகர்ணி என்னும்பதத்திற்கு மொழிபெயர்ப்பாகக்கொள்வர். இத்தகைக் கொள்கைக்கு, இளங்கோவடிகள்.

"அருந்தமிழாற்றலறிந்திலராங்கெனச்
சீற்றங்கொண்டிசசேனைசெல்வது
நூற்றுவர்கன்னர்க்குச்சாற்றி"

என்று ஓரிடத்திலும்,

"வேற்றுமையின்றிமின்னொடுகலந்த
நூற்றுவர்கன்னர்"

என்று மற்றோரிடத்திலும் "கங்கைப் பேரியாற்றுக்கன்னரிற்பெற்ற வங்கப்பிறப்பு" என்று வேறோரிடத்திலும் வரைந்துள்ளது முரணும். தவிர சதகர்ணியென்னும் பெயர் ஸ்ரீமான் பந்தார்க்கர்என்பவருடைய தக்கணசரித்திரத்திற்கண்டபடி ஒருவம்சத்தின் பெயரேயன்றி ஒருவன் பெயரன்று. ஆயினும் சதகர்ணியென்பது ஒருவன் பெயரேயாய் அவ்வம்சாவளியின் முதலில் கி.மு. 40-கி.பி. 16-க்குள் காணப்படுகிறது. அவ்வார்த்தையை நண்செவியென்று மொழிபெயர்ப்பது நாறுசெவியென்று வியப்புக்கூற்றாய் மொழிபெயர்ப்பதினும் நன்றாயிருக்கும். அன்றி அக்காலத்தவராகிய இளங்கோவடிகள் நூறு என்னும் அளவடையைக் காதின்மேலன்றி மனிதர்மேலேற்றி மொழிபெயர்த்தனரென்பது ஒவ்வாது. தவிர இவர்கள் மகததேசம் தங்கள் ராச்சியத்தில் சேர்ந்திருந்தபோதிலும் தக்கணத்திலாண்டவர்களாய் இருந்தனர். அப்படியே "நூற்றுவர்கன்ன" ரென்றதை சதகன்னியென்றே எடுத்தாளப்புகினும் செங்குட்டுவன் காலத்திய சதகன்னி மகாராஷ்டிரத்தில் கி. பி. 154-முதல் 174-வரை ஆண்டு 172—202-வரை தெலுங்கணத்தில் ஆண்டவனான யக்ஞசிரி சதகர்ணியாயிருத்தல் கூடும். இப்படியேயாயினும் தெலுங்கணத்தில் கி. பி. 202-முதல் 208-வரை ஆண்ட விஜயனென்பான் பெயர் எல்லாப்புராணங்களிலும் காணப்பெறும். ஆயினும் செங்குட்டுவன் கங்கைக்கரைபோய் "உத்தமரிஇ" கனகவிஜயருடன் போர்செய்தானென்பதற்கிது முரண்படும். இஃதெற்றேயாயினும் செங்குட்டுவனிக்காலத்து விளங்கியவன் என்பது, செங்குட்டுவன் தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனும் சோழன் கரிகாற்பெருவளத்தானும் ஆரியப்படைவென்கண்ட செய்தியினின்றும் ஊகிக்கலாம். இக்காலத்தே நாகபாணன் என்பவனும் அவற்குப்பின் வந்த ரிஷிபதாதனென்பவனும் ஜீனூர் என்னும் ராஜதானியிலிருந்து மகாராஷ்டிராத்திற் கோளம் வரையிலாட்சி செலுத்தினதாகத் தோற்றினதினுலும் இவர் வம்சத்தையும் மாளவதேசத்தை ஆண்ட சஷ்டணன் என்பவன் வம்சத்தையும் அழித்தவர் கோதமபுத்திரசதகர்ணியென்பானொடு அவன்

மகன் புலோமவித் அல்லது புலிமாயி என்பதனாலும் இக்தமிழ் வேந்தர்கள் கோதமிபுத்ரசதகர்ணிக்கு உதவிபுரிந்திருத்தல் சாத்திய மென்பது ஒருதலை. கோதமிபுத்ரசதகர்ணி குண்டூருக்கருகிலிருந்துவந்து இச்சகரைப் புறங்கண்டு தம்முன்னோர் ராச்சியத்தைக்கைக்கொண்டானென்றும் மலையச்சிமய பர்வதங்களைச் சூழ்ந்த நாடுகள் அவராட்சிக் கடங்கியவையென்றும் தெரியவந்திருப்பதையும் சோழன் கரிகாலன் வச்சிரநாட்டு மகத அவந்தி அரசர்களினால் நன்கு மதிக்கப்பெற்றானென்பதையும் உற்றுநோக்கின் இக்கரிகாலன் செய்தியை முழுதுங் கற்பனையாகக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. மேலாராய்ந்த விஷயங்களையெல்லாம் ஒருங்குபட நோக்கின் செங்குட்டுவன் காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டென்றும், தமிழ் மிகச் செழிப்புற்றோங்கிய காலம் கி. பி. 2, 3-ம் நூற்றாண்டுகளேயென்றும் கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

கி. மு. மூன்றாம் பாதத்தில் பௌத்தமதம் தென்னிந்தியாவிற் புக்கது. அது இங்கு ஊன்றியுயர்ந்தோங்குவதற்கு அக்காலத்து நிலைமையில் வெகுநாள் பிடித்திருக்கவேண்டும். மணிமேகலையில் விரித்துரைக்கப் பெற்றிருக்கும் பௌத்தமதக் கொள்கைகளைக் கொண்டு நோக்கின் இலங்கைச் சரிதங்களை மொழிபெயர்த்தவராகிய கிறிஸ்தவ வித்வான்களும் வியக்கத்தக்கதாய்ச் சிறந்தகொள்கையினின்றும் சற்றும் வழுவாததாய் அம்மதம் இங்கு இருந்ததென்று கொள்ளவியலும். ஆகையினால் கிறிஸ்தாப்தமுதல் நூற்றாண்டுகளே தென்னிந்தியாவில் பௌத்தமதம்சிறந்தோங்கிய காலமாகும். சீனயாத்திரிகரான யாஹயன்என்பவர் இத்தேசத்திலிருக்கும்போதே பௌத்தமதம் தன்மை புரண்டு பிராம்மணமதம் எதிரிடத்தலைப்பட்டது. அதற்குப்பின் இரண்டுமூன்று சதமானங்களில் பௌத்தமதம் தடைக்கப்பெறத் தமிழ்த் தேயத்தில் சைவவடியார் வைஷ்ணவாழ்வார்களானபெரியோர் பெருமுயற்சியால் பிராமணமதம் யுவன்சுவாங் யாத்திரிகர்காலத்தில் இழந்த சீரைத் திரும்பப் பெற்று விளங்கிற்று. இக்காலத்தினின்றும் விளைந்த வாதங்கள் சமணருக்கும் பிராமணருக்குமேயன்றி, பிராமணருக்கும் பௌத்தருக்குமவ்வளவாய்க் காணப்படவில்லை.

துங்கபத்திரைக்குத் தென்பாற்பட்ட நந்தேயமானது பின் வரும் ஆட்சிப்பாடடைந்திருந்தது. காவிரிமுகத்தினின்றும் புறப் பட்டுக் காவிரிக்கரையே சென்று கரூர்க்கருகில் அந்திபுகும் அம ராவதிக்கரைமார்க்கமேபோய் அதுபிறக்கும் மலையமலையடிவாரம் வரைக்கும்போனால் சேரபாண்டிநாட்டெல்லையைக் குறிப்பிட்டதா கும். கரூரினின்றும் சோழன்தொண்டிக்குக் கொஞ்சம் தெற்காக சமுத்திரக்கரைவரை நேர்தென்கிழக்காய் ஒரு வரியிழுப்பின் அதற் குத்தென்னாடு பாண்டியர்க்கும் வடநாடு சோழர்க்குமுரித்தானதா கும். ஆயின், அவாவரது என்று மேற்குறிக்கப்பட்ட நாடுகள் எப் பொழுதும் அவரவர் வசப்பட்டதேயென்று கருத வொண்ணாது. எல்லையூர்கள் வெகுஜாக்கிரதையோடும் அரண் முதலியவைகளாற் பலப்படுத்தப்பெற்றதனால் அவைகளையடக்கியாள்வது வெகு கடின மென்று அக்காலத்தியவரசர்கள் தெரிந்தனரென்று ஊகிக்கலாம். புகார் அரசுவீடாயிருந்தகாலத்திலுங்கூட சோழர்கள் எப்போதும் மேற்கே உறையூரையும் வடக்கே காஞ்சியையும் போர்க்குரிய பேர ரண்களாய் நிருமித்திருந்தனரென்பது காணக்கிடைக்கிறது, இம் மூவேந்தர்நாடும் கூடுமிடம் கரூர் என்பதற்கு இதனருகில் விளை ந்த பெரும் போர்களேசான்றாம். ஆகையால் இந்நாடும் முக்கியமா ய் அநேக மலையிடங்களும் சிற்றரசர்களால் நிரம்பியதாய் இப்பே ரரசர்கள் வன்மைக்கும் தன்மைக்குந்தக்கபடி அடங்கியேனும் அதி ர்ந்தேனும் வதிந்து இருபெருநாட்டெல்லைகட்கு இடைப்பட்டனவா யிருந்தன. இம்மாதிரியாக இருங்கோவேள்நாடு மைசூருக்கும் கு டகுக்கும் மத்தியிலும் சேரவம்சத்தவனான அதிகமானஞ்சிதகடூர் நாடு அதற்கருகிற்றெற்கேயுமிருந்தன. பழனிமலைக்குச் சுற்றி யிருந்தநாடு நல்லூர்க்கதிபதியான பேகனதாம். இதற்கும் தகடூர் நா ட்டிற்கும் நடுப்பட்டது பாரியின்பறம்புநாடாகக்கொள்ளலாம். இ தற்குக் கிழக்கு இக்காலத்திய சேலமும் கோயம்புத்தூரும் சேர்ந்த கொங்குநாடாகும். இதற்குச் செங்கிழக்காய் கீழ்சமுத்திரக்கரை யருகிலுள்ளது திருக்கோவலூரான் காரியின்மலாடு. இதற்குத் தெற்குப் பட்டு வடக்கு காஞ்சியையுமுட்கொண்டது சோழநாடு. பாலைக்காட்டுக்கணவாய்க்குத்தெற்கிற்றாய் மலையமலையின் பொதியிற் குன்றைச்சுற்றிய நாடு ஆய்க்குரியதாயும், அதற்கெதிர் கிழக்காய்

கொற்கையைச்சுற்றியது எவ்விக்குரியதுமாகும். செங்குட்டுவச்சேரனாட்சிக்கடைசியிற் காரியினுதவியால் ஓரியிடம்கொண்ட கொல்லிமலையினின்றும் கடற்றுறைப்பட்டினமான தொண்டிவரைக்கும் சோழ பாண்டிநாட்டிற்கிடைநாடு, சேரவதிகாரியொருவனாட்சிக்கடங்கியிருந்தது ; இவனே யானைக்கட்சேயென்பான். இத்தகையபாகுபாடு ஒரேமாதிரியாய் நிலைபெறாமல் சிற்சிலகாலங்களிலேயே வேறுபட்டு மாறிக்கொண்டிருந்தனவென்பது அக்காலத்திய நூல்களினின்றே வெளிப்படும்.

இப்பொழுது நாம் கருதிய இக்காலத்தை சேரவுயர்வுகாலமென்று சொல்லத்தகும்; ஏனெனில் முடியுடைவேந்தர் மூவருள்ளும் இக்காலத்து, செங்குட்டுவச் சேரனேசிறப்புற்றோங்கியுள்ளோன். இதற்குப் பிற்காலம் சேரர்க்கும் பாண்டியர்க்கும் போருண்டாய்ச் சேரவுயர்வுகுலையப் பாண்டியர்களே காரணராயினர்கள். இதினின்றும் பல்லவ உயர்வு பெறவாரம்பித்த சுமார் கி. பி. 400வரை இத்தேயத்து நிலைமையையறியஇயன்றசான்று இல்லைபோலும். சமுத்திரகுப்தன் சமகாலத்தவனான காஞ்சிவிஷ்ணுகோபன் காலத்தினின்றும் பல்லவ உயர்வாரம்பித்து, சளுக்கியர் அரசவீடான வாதாபியைச் சுமார் கி. பி. 640-ல் சுட்டெரித்த நரசிம்மவர்மன் காலத்தில் மிகத்தழைத்தோங்கியது. இதினின்றும் சுமார் 100-வருடங்களுக்குப்பின் கங்கர்க்கும் பாண்டியர்க்கும் கும்பகோணத்திற்கருகில் சண்டைவிளைந்ததுகண்டுள்ளாம். இத்தகைய செய்கை நமக்குத்தெரிந்தமட்டும் பாண்டியர்கள் செய்துள்ளார். இப்பரியாயதீபத்தின் தெற்குமூலையிலிருப்பதால் அவர்கள்நிலைகுலைவின்றி,ஏனைய அரசர்கள் சீர்குன்றும்காலத்தெல்லாம்மேலெழுந்தவராவார். சரித்திரவாராய்ச்சியிற் கண்டமட்டும் இத்தென்தேயத்தரசர்கள் தக்கணத்தினின்று தெற்கு வரவொண்ணாதபடி எதிர்ப்பதே தொழிலாய்ப் பூண்டிருந்தனர். பல்லவர்கள் உயர்வடைந்தகாலமுதல் இத்தென்தேயத்தரசர்களின் நிலைமை ஒருவாறு தெளிவாய்ப் புலப்படும். வரகுணபாண்டியன் கங்கரைத் தன் தேயம்புக ஓட்டினான். அதற்கொரு நூற்றாண்டின் பின் நவீன சோழராஜவம்சமொன்று முன்வந்து மிகச் செழிப்புற்றோங்கியகாலத்து விஜயநகர்ச் சக்கராதிபத்தியத்தின் அடைந்த விரி

வைச் சோழர்கள் பெறச்செய்தனர். இச்சோழர் சீர்குன்றவே தெற்கிருந்த பாண்டியரும் வடக்கிருந்த போச்சலரும் சோணாடுபுகுந்தனர். இவ்விருவம்சமகத்துவமும் வடக்கிருந்து படையெடுத்து வந்த மாலிக்காபொரால் அழிவுபெற்றது. இம்மகம்மதிய உயர்வை நீக்க பெருமுயற்சி செய்த சிற்றரசர் அனேகர். இவர் பெருமுயற்சியெல்லாம் பதினான்காம் நூற்றாண்டில் நிலைபெற்ற விஜயநகரசக்ராதிபத்தியத்தாற் பயன் பெற்றது. இச்சக்ராதிபத்தியம் உடைந்தழியவே தென்னிந்தியாவில் இந்துக்கள் ஆட்சி முடிவுபெற்றது. ஏனெனின் மஹாராட்டிரா சக்ராதிபத்தியம் நந்தேயசரித்திரத்தில் மற்றொரு பாகுபாட்டிற் கிணங்கியதாம்.

முற்றும்.

---

உ

# நல்லொழுக்கம்.

(சருகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

| ஸ்ரீ: இலக்ஷ்மணப்போற்றி நல் மொழிபெயர்த்தது. |

மற்றப் போதகர்கள் அனைவரினும் ஸ்திரீயானவள் உருக்கமாய்க் கற்பிக்கிறாள். மனிதஜாதி விஷயத்தில் புருஷர் புத்திதத்துவமாகவும் ஸ்திரீகள் தயாதத்துவமாகவும் இருக்கின்றனர். அவன் தீர்மானதத்துவமும், அவள் உணர்வுதத்துவமும், அவன் பலமும், அவள் கருணையும் அலங்காரமும் ஆறுதலுமாக இருக்கின்றனர். நல்ல சுபாவமுள்ள ஸ்திரீயினுடைய அறிவும் முக்கியமாய் அவளுடைய அன்பின்மூலமாகக்காரியப்படுவதாய்த்தோற்றுகிறது. இவ்வாறு மனிதன் அறிவை வளர்த்தபோதிலும் ஸ்திரீயானவள் முக்கியமாய் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துகிற உணர்வுகளை வளர்க்கின்றனள். அவன் ஞாபகத்தில் வசிக்கிறான்; அவள் இருதயத்தில் தங்குகிறாள். அவன் நம்மைக் கேவலம் நம்பும்படிசெய்வதை அவள் நேசிக்கும்படி செய்கிறாள். முக்கியமாய் அவள் மூலமாகத்தான் நாம் யோக்கியதையடையசக்தராகின்றனம்.

ஒழுக்கத்தைச் சிக்ஷித்து உண்டாக்குவதில் முறையே விளங்கிய தந்தைதாயுடையசக்திகள்-செண்ட் ஆகஸ்டைனுடைய ஜீவிய சரித்திரத்தில் விசேஷமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. தாகஸ்டீயின் எளியமனிதனாகிய ஆகஸ்டைனுடைய தந்தையானவர் அவருடைய குமாரனது சாமர்த்தியங்களைப் பற்றிப் பெருமைபாராட்டி அவனுடைய மனசில் உயர்ந்த கல்வியைக்கொடுக்க முயற்சித்துத் தன்னுடைய சொத்தின் திறத்திற்கு அதிகமாகச் செலவிட்டதற்காகப்பக்கத்திருக்கிறதக்கவர்களால் புகழப்பட்டார்; ஆனால் அவனுடைய தாயார் மோனிக்காஎன்பவள் தன் மகனுடையமனசை மிகவும் நல்லநோக்கத்தில் நடத்தவிரும்பி அன்புள்ள சிரத்தைகொண்டு அவனுக்கு ஆலோசனை சொல்லி அவனை வேண்டிக்கொண்டு யோக்கியமாயிருக்கஅவனுக்குப் புத்திசொல்லி அவனுடைய துன்மார்க்கநடத்தையினிமித்தம் உண்டான அதிக வருத்தம் கஷ்டங்களுக்குள்ளும், கடவுள் கிருபையுண்டாகிறவரை, அவனுக்காகக் கடவுள் பிரார்த்தனையில் ஒருபொழுதும் ஒழிவடைந்ததில்லை. இவ்வாறு கடைசியில் அவளுடைய அன்பானது வெற்றியுற்று அவளுடைய பாக்கியம்பெற்ற புத்திரன்மட்டுமல்ல அவளுடைய கணவனும் நல்லொழுக்கத்திற்குத்திரும்பியதால் அந்தத்தாயினுடைய பொறுமையும் நற்குணமும் சபலமாயின. வெகுகாலம் வாழ்ந்து தன் கணவனுடைய மரணத்திற்குப் பிற்பாடு மோனிக்கா ஆனவள் அன்பின் வயப்பட்டுத் தன் மகனைப்பாதுகாப்பதற்கு அவனுடன் மிலன் நகரத்திற்குச் சென்றனள். மகனுடைய முப்பத்து மூன்றுவதுவயதில் அங்கே அவள் இறந்தாள். அவளுடைய நிதர்சனமும் போதனையும் அவனுடைய மனதில் மிகவும் அழுந்திப் பின் ஒழுக்கத்தைநிலைமைப்படுத்தியது அவன் வயதின் ஆரம்பத்திலே தான்.

ஒரு குழந்தையினுடைய மனதில் நல்லொழுக்கத்தின் சின்னங்கள் அதிபால்யத்தில் அழுந்தி, மத்தியகாலத்தில் துராபிமானமுற்றுதுர்க்குணத்தோடும் கூடியிருந்து முதிர் வயதில் அந்நல்லொழுக்கம் திரும்பஉண்டாகப் பெற்றவர்களுடைய சரித்திரங்கள் இதுபோலொத்த அநேகமிருக்கின்றன. தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளிடத்தில் நேராயும் யோக்கியமாயுமுள்ள ஒழுக்கத்தையுண்டாக்

குவதற்கு அவர்களால் முடியுமாறு செய்தவையனைத்தும் வெளிக்கு வியர்த்தமாகக் காணலாம். அது ஜலத்தில் கரைத்து இழந்துபோன ரொட்டிபோல் தோற்றுகிறது. ஆனால் உத்தேசம் இருபது வருஷங்களுக்குமேல் தாய் தந்தையர் நிர்வாணபதம் அடைந்த பின்னர் அவர்கள் தங்கள் புத்திரர் புத்திரிகளுக்கு, முன்பே சைசவத்தில் காட்டிய நல்ல அனுஷ்டானமும் விதியும் கடைசியில் உற்பவித்து பயன்தரும்படி சிலசமயம் சம்பவிக்கின்றன.

அப்பேர்ப்பட்ட திருஷ்டாந்தங்களில் ஒன்று கவிஞராகிய கௌப்பரின் இஷ்டரான ஆல்னியின் ஜான்நியூட்டன் என்பவருடையது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. அவர் தாய்தந்தையருடைய மரணத்துக்கு வெகுகாலத்துக்குப் பின்னும் வாலிபத்திற் கப்பற்காரனாயிருக்கையில் துன்மார்க்கநடையை உரித்தானவராயிருந்த பின்னும் திடீரென்று அவருடையதுன்மார்க்கத்தின் உணர்ச்சி உதித்தது. அப்பொழுது தான் குழந்தையாயிருக்கும்பொழுது அவருடையதாயார் அவருக்கு அளித்திருந்தகற்பனைகள் அவருடையஞாபகத்தில் தெளிவாய் உண்டாயின. அவளுடைய வாக்கானது இறந்தவரிடத்தில் நின்றும் வந்தாற்போன்றுதித்து, அவரைச்சன்மார்க்கத்திற்கும் நற்குணத்திற்கும் மெதுவாய்த்திருப்பிற்று.

அமேரிக்கர் மாதிரியாகிய ஜான்ரேன்டால்பைப்பற்றிய வேறொரு திருஷ்டாந்தமுண்டு. அவர் ஒருகாலத்திற் சொன்னதாவது "ஒரு ஞாபகம் எனக்கு இல்லாதிருந்தால் நான் நிரீசுரவாதியாயிருந்திருப்பேன்; அந்த ஞாபகம் வருமாறு காலம் சென்ற என்னுடைய மாதா என் சிறியகையை அவளுடையகையில் எடுத்துவைத்து என்னைமுழந்தாட்பணியிடும்படி செய்து 'பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதாவே' என்று சொல்லும்படி செய்வதுவழக்கம்". ஆனால் மொத்தத்தில் அப்பேர்ப்பட்ட திருஷ்டாந்தங்கள் சிற்சிலவாகவே மதிக்கப்படவேண்டும். ஒழுக்கமானது சிறுவயதிலே மனசைப்பற்றிக்கொள்கிறபடியால் மனிதத்தன்மையடைகிறபொழுது வாவாஸ்திரப்பட்டுக்கொண்டேயிருப்பது சாதாரணமாய்க் காணப்பட்டிருக்கிறது. சௌத்தி என்பவர் சொன்னதாவது, "நீ எவ்வளவு காலம் வசித்தாலும் முதல் இருபது வருஷம் உன்னுடைய ஆயுசுக்கெல்லாம் செ

ம்பாதியாகின்றன.'' அவைகள்தாம் அநேகமாகப்பயனை அந்தர்க்கதமாயுடையன. இற்றுப்போன பொய்யனும் காமியுமானடி. ஆர். வால்க்காட் என்பவர் தன் மரணப்படுக்கையிலிருந்தபொழுது அவர் இஷ்டர்களிலொருவன் அவரைத் திருப்திசெய்கிறதற்காகத்தான் ஏதாவது செய்யக்கூடுமா என்று கேட்டான். "ஆம்" என் இளமையைத்திரும்பத்தாரும்'' என்று சாந்தன்மையுடைய அவர் ஆவலோடு சொன்னார். அதைமட்டும் அவருக்குக் கொடுத்தால் அவர் பச்சாத்தாபப்பட்டுத் தன்னைச் சீர்படுத்திக்கொள்வார். ஆனால் அப்பொழுது காலம் கடந்து விட்டது. அவர் ஜென்மம் வழக்கமென்கிற விலங்கினால் கட்டப்பட்டு அடிமைப்பட்டுவிட்டது.

கானசாஸ்திர கவிஞனாகிய கிரிட்டிரி என்பவர், ஒழுக்கத்தைப்பயிற்சிசெய்தற்கு ஸ்திரீகள் முக்கியம் என்ற உயர்ந்த எண்ணங்கொண்டு ஒரு நல்ல தாயைப் பிரகிருதியின் உயர்ந்த சிருஷ்டியாக விவரித்தனர். அவர் கூறியது உண்மையேயாம். தந்தையரினும் எவ்வளவோ அதிகமாய் நல்ல தாய்மார் மனிதரின் ஒழுக்கத்தை இடையறாது புதுப்பித்தற்கு உபகாரப்படுகின்றனர். பாஞ்சபௌதிகமான ஆகாயமானது ஸ்தூலசரீரத்திற்கு உரிமைப்படுவதுபோன்று, அவர்கள் மனிதனுடைய சன்மார்க்க ஸ்திதிக்கு ஆதாரமாகிய குடும்பயோக்கியதையை உண்டாக்குதற்குக் கருவியாகின்றனர். ஸ்திரியானவள் அறிவினால் எழுந்த நற்குணம், இனிமை, பக்ஷம் முதலிய குணங்களால் மிகத்தூய்மையும் ஆண்மையுமான சுபாவங்கள் வளருதற்குத் தகுதியான மனக்களிப்பும் மனத்திருப்தியும் ஆறுதலுமாகிய ஆகாயத்தைக் குடும்பத்தில் வசிப்பவர்களைச் சூழும்படி செய்கிறாள்.

சன்மார்க்கமும் கையிறுக்கமும், மனக்களிப்பும், பரிசுத்தமும் உள்ள ஸ்திரியினால் ஆளப்பட்ட மிகவும் எளியகுடியானது இவ்வாறு சௌக்கியத்திற்கும் சற்குணத்திற்கும் இன்பத்திற்கும் இருப்பிடமாயிருக்கலாம். கிரகஸ்த ஆச்சிரமத்தில் ஒவ்வொருமேன்மையான உறவினர்க்கும் காட்சிஸ்தலமாயிருக்கலாம்; அது இருதயத்திற்குத் தேவாலயமாகவும், பிறப்பின் துன்பத்தைப்போக்கப் புகலிடமாகவும், வேலைசெய்தவர்க்கு இனிமையான இளைப்பாறும் ஸ்தலமாக

வும், கஷ்டத்தில் ஆறுதல் ஸ்தானமாகவும், செழிப்பில் கௌரவப் பொருளாகவும், எக்காலத்திலும் இன்பப் பொருளாகவும் இவ்வாறு மனிதனுக்கு மனோரம்மியமான பலவித சம்பந்தங்களால் பிரியமுள்ளதாகலாம்.

இவ்வாறு நல்ல குடும்பமானது இளமையில் மட்டுமன்று, முதுமையிலும் மிகவும் நன்மையான கல்விச்சாலையாயிருக்கின்றது. அவ்விடத்தில் இளைஞரும் முதியோரும் மனக்களிப்பையும், பொறுமையையும், தன்னடக்கத்தையும், பரோபகாரமும் கடமையுமாகிய தன்மையையும் நன்ருய்ப்பயில்கின்றனர். ஐசேக்வால்ட்டன் என்பவர் ஜியார்ஜ்ஹெர்பட்டுடைய தாயைப்பற்றி சொல்வது வருமாறு. அவள் தன்னுடைய குடும்பத்தைக் கண்டிப்பாயாவது வெறுப்பாயாவது அல்லாமல் குழந்தைகளுடைய விளையாட்டுக்கும் இன்பத்திற்கும் இணங்க, இனிமையுடனும் புத்திசாலித்தனமான ஜாக்கிரதையோடும் நடத்திவந்தாள். அதனால் அந்தக்குழந்தைகள் அவள் கூடவே மிகுதியான நேரத்தைக்கழிக்கப் பிரியப்பட்டனர். அது அவளுக்கு அதிகத்திருப்தியாயிருந்தது.

கிரகம்தான், சமூகமான குணத்தைப் பயிற்றுவதற்கு உண்மையான இடம். அதை யெப்பொழுதும் அநுஷ்டானத்திற் பயிற்றுவதில் சிறந்தவர் ஸ்திரீகளேயாவர். ஸ்திரீகள் இல்லாப் புருஷர்கள் பால்குடியில்லாத கன்றுகளுக்குச் சமானமென்னும் பழமொழி உண்டு. பரோபகார குணமானது ஓர் மத்தியஸ்தானத்தில் நின்று பரவியது போல,கிரகத்திலிருந்து பரவுகின்றது. ஜனசமூகத்தில் நாம் உரிமைப்பட்ட சொற்பபந்துக்களை நேசிப்பதானது, சகல ஜனங்களுக்கும் செய்யும் பரோபகாரமான குணத்திற்கு மூலமாயிருக்கின்றது என்றுபர்க் என்பவர் சொன்னார். மிக்க அறிவினரும் நன்மையிற் சிறந்தவருமான இவர்கள் தம்குடும்பத்தின் நிர்மலமான கூட்டத்திலுள்ள குழந்தைகளை முன்னர் வைத்துக்கொண்டு இருப்பதில் எழும் பெருங்களிப்பையும் பேரானந்தத்தையும் உரிமைப்படுத்த வெட்கமடைய மாட்டார்கள். ஒரு மனிதனுடைய தூய்மையும் கடமையுமுள்ள ஒழுக்கமானது வெகு ஜனங்களுக்குச் செய்யத்தக்க காரியத்

திற்கும் கடமைக்கும் மிகப்பயனுற்ற சாதனமாகின்றது. தன் குடும்பத்தை நேசிக்கிறவன் தன் தேசத்தை நேசித்து அதற்கு ஊழியஞ் செய்வதிற் குறைந்த பிரியமுள்ளவனல்லன்.

ஆனால் ஒழுக்கத்தை வளர்த்தற்குரிய வீடுகள் நன்மையான கல்விச்சாலைகளாவதுடன் தீமைக்குப் பயிலிடமாகவுமாகலாம். சைசவத்திற்கும் கௌமாரத்திற்கும் நடுவே வீட்டிலுள்ள அறியாமையினாலுண்டாகக் கூடிய கேடு எவ்வளவு எண்ணிறந்ததாயிருக்கிறது! ஆரம்ப சுவாசத்திற்கும் ஒடுக்க சுவாசத்திற்கும் மத்தியில் தகுதியற்ற தாய்மாராலும் செவிலிகளாலும் சம்பவித்த சன்மார்க்க நஷ்டமும் பீடையும் எவ்வளவு அதிகமாயிருக்கின்றன! அபாத்திரமான மூடமுள்ள ஸ்திரீவசம் ஒரு குழந்தையை ஒப்புவித்தால் நீ பின்னர் எவ்வளவு கற்பித்தாலும் உன்னால் உண்டானதீமையை நிவிர்த்திக்கமுடியாது. தாயானவள் சோம்பலும் துன்மார்க்கமும் அஜாக்கிரதையுமுள்ளவளாய் அவளுடைய வீட்டில் பொய்வாதமும், அகங்காரமும், அதிருப்தியும் வியாபித்திருப்பின் அது துன்பத்திற்கு இருப்பிடமாய் அதை நோக்கிச் செல்வதினும் அதனை நீங்கிச் செல்லத் தகுதியுடையதாம். அங்கே வளர்க்கும்படியான நிர்ப்பாக்கியத்தைப் பெற்ற குழந்தைகள் சன்மார்க்கத்தில் குறைவுற்று குரூபமடைவர். அது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பகாரணமாகின்றது.

ஓர் குழந்தையின் பிந்திய நல்லொழுக்கமாவது தீயொழுக்கமாவது முழுமையும் மாதாவைப் பொறுத்ததென்று நெப்போலியன் போனபார்ட் சொல்வது வழக்கம். தம்முடைய கருத்தையும் ஊக்கத்தையும் அடக்கத்தையும் கிருகத்தில் தம்முடைய தாயார் பழக்கியதால் தாம் பெரும்பாலும் தமக்கு உலகத்தில் உயர்வுண்டானதாக அவர் சொல்லுகிறார். அவருடைய ஜீவிய சரித்திரக்காரரில் ஒருவர் சொல்லுகிறதாவது "அவருடைய தாயைத் தவிர அவர் மீது வேறொருவருக்கும் அதிகாரமிருந்ததில்லை. அவள் உருக்கம் கண்டிப்பு நீதியாகிய இவற்றால் தன்னை நேசிக்கவும் வணங்கவும் தனக்குக் கீழ்ப்படியவும் செய்யத்தக்க உபாயம் கண்டவள்; அவளிடத்திலிருந்து தான், கீழ்ப்படிதலின் தர்மத்தை அவர் பழகினர் என்க."

குழந்தைகளுடைய ஒழுக்கத்திற்குத் தாய்மார் ஆதாரவென்று மிஸ்டர் டப்நெல் என்பவருடைய கலாசாலைச் சமாசாரப் பத்திரிகைகளொன்றில் விளக்கப்பட்டிருக்கிறது. அவர் கண்ட உண்மையானது வியாபார சம்பந்தமான காரியத்திற்கு உபகாரமாய் இருப்பதால் நன்றாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர் சொல்லுகிறதாவது, "ஒரு பெரிய பண்டசாலையில் அநேக குழந்தைகள் வேலை செய்த விடத்தில் அந்தக் காரியத்தலைவர்கள் ஒரு பையனை நியமிப்பதற்கு முன்னர் அவனுடைய தாயின் ஒழுக்கத்தைப் பற்றி எப்பொழுதும் விசாரித்து அது திருப்தியாயிருந்தால் அவளுடைய குழந்தைகளும் மதிப்புடன் தங்களை நடத்திக் கொள்வார் என்று அவர்கள் கூடியவரை நிச்சயமுற்றிருந்தனரெனக் கேள்விப்பட்டேன். பிதாவின் ஒழுக்கத்தைப்பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை" என்க. தந்தை குடியனுய்க் கெட்டொழிந்து துன்மார்க்கத்திற்குத்திரும்பின விஷயத்தில் தாயானவள் புத்திசாலியாயும் முன்யோசனையுள்ளவளாயுமிருந்தால் அந்தக்குடும்பமானது ஒற்றுமைப்பட்டுக் குழந்தைகள் கண்ணியமாய் வாழ்நாளைக்கழிக்க முடியும் எனவும், ஆனால் அதற்கு மாறாகத்தாயானவள் துன்மார்க்கமுடையவளாய்த்தந்தையெவ்வளவு நல்லொழுக்கமுடையவனுயிருந்த போதிலும் குழந்தைகள் பிற்காலத்தில் நன்மையாயிருத்தல் அருமையெனவும் காணப்பட்டிருக்கிறது.

ஒழுக்கமுண்டாவதில் ஸ்திரீகளாலுண்டாகிய வசவிர்த்தியானது பெரும்பாலும் இரகசியமாகவேயிருப்பது இன்றியமையாமையாம். அவர்களுடைய சிறந்த கர்மத்தை வீட்டின் அமைதியுள்ள ஒடுக்கமான ஸ்தலத்தில் கடமையின்பால் சகிக்கப்பட்ட முயற்சியாலும் பொறுமையான விடாமுயற்சியாலும் அவர்கள் நிறைவேற்றுகின்றனர். அவர்களின் மிகச்சிறந்த வெற்றிகள் இரகசியமும் கிரகத்துக்குரியனவுமாதலின் லிகிதங்களிற் பதிக்கப்படாமலிருக்கின்றன. கீர்த்திபெற்ற மனிதருடைய ஜீவியசரித்திரத்திலும்கூட ஒழுக்கமுண்டாவதிலும் நன்மையின்பால் மனதைத்திருப்பினதிலும் தாய்மார்கள் புரிந்த செய்கையைப்பற்றி நாம் அநேகமாய்க் கேள்விப்படவில்லை. ஆனால் அது காரணத்தால் அவைகளுக்குரியபயனை எய்தாமற்போகவில்லை. அவர்கள் செலுத்திய போதனை சக்தியானது எழுத

ப்படவில்லையாளுலும் அவர்களுக்குப் பின்னே வசித்து எக்காலமும் பயன்களைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றது.

நாம் பெரிய புருஷர்களைப் பற்றிக் கேள்விப்படுகிறதுபோல, பிரதாபமுள்ள ஸ்திரீகளைப்பற்றிப்பெரும்பாலும் கேள்விப்படுகிறதில்லை. நல்ல சித்தமுடைய ஸ்திரீகளைப்பற்றித்தான் நாம் விசேடமாகக் கேட்கிறோம். ஸ்திரீ புருஷருடைய ஒழுக்கத்தை நல்ல விதத்தில் உருப்படுத்துவதால் பெரிய சித்திரங்களை வகுப்பதினும், பெரிய புத்தகங்கள் எழுதுவதினும், பெரிய நாடகங்களை உண்டாக்குவதினும், மிகச்சிறந்த பணிசெய்யாநிற்கின்றனர். ஜோஸப்-டி. மெஸ்டிர் சொன்னதாவது, "உண்மையாகவே ஸ்திரீகள் சிறந்த கிரந்தங்கள் உண்டாக்கியதில்லை. அவர்கள் 'இல்லியட்' அல்லது 'ஜெருசலம் டிலிவெர்ட்,' அல்லது 'ஹாம்லெட்' அல்லது 'பெய்டிர்' அல்லது 'பாரடைஸ்லாஸ்ட்' அல்லது 'டார்டப்' என்னும் கிரந்தங்களை உண்டாக்கவில்லை. 'சென்ற்பீடர்ஸ்சர்ச்சை' உண்டாக்கவில்லை! 'மெஸ்ஸையானவை' உற்பத்திசெய்யவில்லை. 'அபாலோபெல்விடீர்' ஆவது 'லாஸ்ட்ஜட்ஜ்' மென்ற் ஆவது வரையவில்லை. பீஜகணிதநூல் அல்லது தூரதிருஷ்டிக்கண்ணுடி அல்லது புகையந்திரத்தைக்கண்டு பிடிக்கவில்லை.

(இன்னும் வரும்.)

---

## குறிப்பு.

ஆனி-மீ" செந்தமிழ்ப் பகுதியில், 420-ம் பக்கத்தில் இறுதிப் பதமாகிய 'துயராகி' என்பதைத் 'தூயராகி' எனவும், 421-ம் பக்கத்தில் 15-ம் வரியில், 'உபநதி' என்பதை 'உபாதி' என்வும், 421-ம் பக்கத்தில் 19-ம் வரியில் 'சிறந்த பாகமுண்டு' என்பதைச் 'சிறந்த பாகமுமுண்டு' எனவும் பிழைதிருத்திக் கொள்க.

---

# சிலகுறிப்புக்கள்.

## 1. மன்றைத்திருவிருந்தான்.

சென்ற மாதத்துச் செந்தமிழில் சேதுசம்ஸ்தான வித்வான் ஸ்ரீமான். ரா. இராகவையங்காரவர்கள் எழுதியுள்ள "செல்லைச்சூடு வாரும் அநதாரியாரும்" என்னும் அரிய விஷயத்தை வாசித்து மனமகிழ்வுற்றேன். ஐயங்காரவர்கள் அவ்வியாசத்தின்கண் திருவிருந்தான் ஊரைக்குறிக்கும்,

"... ... ... ... பொன்னி நதிவா
யுருவந்திகழரங்கக்கருமணியுத்தரத்தொருபான்
மருவுந்திருவிருந்தான்வருமன்றைப்பதியிதுவே."

என்னும் சுந்தரபாண்டியச்செய்யுளை மேற்கோளாய்க் காட்டியுள்ளார். இதில் கூறப்பட்டிருக்கும் "மன்றை" என்பது ஸ்ரீரங்கத்துக்கு நேர்வடக்கே கொள்ளிடத்தின் வடகரையிலிருக்கும் மன்றச்சனல்லூர் என்பது. இம்மன்றச்சனல்லூர் என்னும் பெயர் ஸ்ரீரங்கத்து ரங்கநாதசுவாமி கோயின் மூன்றாம் பிராகாரத்துப்பதித்துள்ள மூன்றாம் இராஜேந்திரசோழன் சாஸனத்தில் காணப்படுகிறது. இப்பொழுது இது மணச்சநல்லூர் என்று பெயர் படுகிறது. திருவிருந்தான் இவ்விடத்தாண்டவனெனின், இவன், அகளங்க நாடாள்வார்களென்னும் பெயர் பூண்டு பாச்சிலைத்தம்முடைய இருப்பாகக் கொண்டு ஆண்டு வந்த சிற்றரசர்கள் வம்சத்தானாக வேண்டும். பாச்சிலுக்கும் மன்றச்சனல்லூருக்கும்தூரம் இரண்டு மைலுக்குள்ளாகத் தானிருக்கும். இப்பொழுதும்அக்கரையில் நாடாவார் களென்று பட்டம் தரித்துக்கொண்டிருக்கும் கள்ளர் ஜாதியார் பலருளர். ஆதலால் இவனும் கள்ளர் சாதியானாயிருக்கலாமென்று தோற்றுகின்றது.

பாண்டியரிருவருள் பாண்டிநாட்டரசாட்சியைப்பற்றிவந்த விவாதத்தைத் தீர்ப்பான்வந்த விஜயநகரத்துத் தண்டநாயகனாகிய நாகமநாயகன், இப்பாண்டியரிருவரைத்தவிர்த்துத் தானே பாண்டிநாட்டுக்கு அதிபதியானான் என்று கேள்வியுற்று, அவன் மகன் விசுவநாதன் தென்னாட்டிற்குவந்து தன்தந்தையைக் காலில் தளையையிட்டு விஜயநகரத்துக்கு அனுப்பி, பாண்டியர்கள் விவாதத்தைத் தீர்ப்பவன்போற் பாசாங்கு செய்துகொண்டிருந்து, விஜயநகர ராஜ்யம் துலுக்கர்களால் அழிக்கப்பட்டதென்று கேள்வியுற்றதும், தானும்

தன் தந்தையைப்போலப்பாண்டிநாட்டைப் பற்றிக்கொண்டு ஆளத் தொடங்கினான். இவ்விசுவநாதநாயகன் உடனே பாண்டி நாட்டைப் பல வலிய படைத்தலைவர்களுக்குப் பாகித்துக் கொடுத்துத்தன்னுள் ளடங்கியசிற்றரசராய் ஆளும்படி ஏற்பாடுசெய்து தான் மதுரையி லிருந்துவந்தான். 1 இவன் பெயரன் முத்துவீரப்பநாயகன்; இவன் தந்தை பெயர் கிருஷ்ணப்பநாயகன்; ஆதலால் இவனைகிருஷ்ணவீரப் பனென்றும் சொல்லுவார்கள்.

இனி முத்துவீரப்பன் கன்னடப்படையை ஜயித்தான் என்றும், அவ்வாறு செய்தவிஷயத்தில் செவ்வந்தியும், திருவிருந்தானும் மிக்க உதவிபுரிந்தார்களென்றும்கூறுவதன்பொருள் இன்னதென்றுஆலோ சிப்போம்.

தலைக்கோட்டையுத்தத்தில் விஜயநகரம்பாழடைந்தபின், விஜய நகரத்தரசர்கள் பெனுகோண்டையைராஜதானியாக்கிஆண்டுவந்தன ர். முதல் வேங்கடபதி என்னுமரசனுக்குக் குழந்தைகளிருக்கவில்லை. இவன் பெண்சாதியாகிய பாயம்மாள் என்பவள் ஒரு பார்ப்பனப்பெ ண்ணுக்குப் பிறந்த சிறுகுழந்தையை அந்தப்புரத்துக்குக் கள்ளத்த னமாய் வருவித்துத் தனக்குப் பிறந்தது என்று சொல்லிவிட்டாள். அரசனும், உண்மையறிந்தவனாயினும், இவளுடைய மனதுக்கு ஒத் துநடந்தான். ஆயினும்இவ்வரசன் இப்பையனுக்குராச்சியங்கொடுக்க இஷ்டமில்லை. ஆதலால்இறக்கும்போது தன்தம்பிமகனுக்குப்பட்ட ங்கட்டினான். அதுமுதல் பிராமணப்பையன் தரத்தார் என்றும் அரச ன் தம்பிதரத்தாரென்று மிருகக்ஷிக்காரர்கள் ஏற்பட்டார்கள். இ ருகக்ஷியில் முதலவன் கக்ஷிக்குத் தலைவன் ஜகராயன் என்பான். இ வன் மகளை அப்பிராமணப்பையனுக்குக் கலியாணஞ்செய்து கொடு த்திருந்தான். ஆதலால் இவன்கக்ஷிக்குத் தலைவனாகவேண்டிய அ வசியம் உண்டாயிற்று. மற்றவன் கக்ஷிக்குத் தலைவன் எசம்மநாயக ன். இவன், யாருமறியாப் பிராமணப்பையனுக்கு ஆட்சிகொடுக்க க்கூடாது, இராஜவம்சத்தானுக்கே சேரவேண்டுமென்னும் எண்ண த்தையுடையான். இவ்விருதரத்தாருக்கும் கி. பி. 1614-1616-க்கு

---

1 இந்தக் காரணம்பற்றித்தான் பாண்டிநாட்டில் பலஜமீன்தாரி களிருக்கக் காண்கிறோம்.

மிடையில் பலசண்டைகள் நடந்தன. அவைகளில் தஞ்சாவூரையாண்ட நாயக்கன் இராஜவம்சத்தானுக்காக எசம்மன் கக்ஷியைச்சேர்ந்தான். மதுரையை யாண்ட வீரப்பன் பிராமணப்பையனுக்காக ஜகராயன் கக்ஷியைச் சேர்ந்தான். இவ்விருதிறத்தாருக்கும் கி. பி. 1616-ல் மணச்சநல்லூரண்டை ஓர் பெருத்த யுத்தம் நடந்தது என்பதற்குப் பல ஆதாரங்களுள. ஆதலால் எசம்மனுடைய கன்னடப் படையை எதிர்த்து, தன் நண்பர்களாகிய செவ்வந்திக்கும் வீரப்பனுக்கும் உவப்பாகும் வண்ணம், திருவிருந்தான் சண்டைசெய்திருக்கவேண்டும். ஆயினும் மதுரைநாயக்கர்கள் பிற்காலத்து பெனுகொண்டையரசர்களுக்காக மதுரையில் அதிகாரஞ்செய்துவந்ததாகச் சாஸனங்களில் கூறிக்கொள்வதனாலும், இராஜவம்சத்தான் பட்டம் பெற்று ஆண்டுவந்தனமையாலும் வீரப்பன் தோல்வி யடைந்திருக்கவேண்டுமென்பது நிச்சயம்.

து. அ. கோபிநாதராவ்.

---

## 2—மதுரை.

---

பண்டைக்காலத்து மதுரையானது நான்மாடக்கூடலென்று பெயர்கூறப்பட்டுவந்தது. இப்பெயரே பிற்காலத்திய தமிழிலக்கியத்திலும் வெகுவாய்க்காணப்படுகின்றது. சிற்சில சமயங்களில் இதனைச்சுருக்கி மாடக்கூடல், கூடல் என்று வழங்குவதுண்டு. இதற்கு நான்மாடக்கூடலென்று பெயர்வாய்த்ததற்கு நச்சினார்க்கினியார் கலித்தொகை 71-ஆம் பாட்டின் "நான்மாடக்கூடலின் மகளிரும் மைந்தரும்" என்னுமடியின் குறிப்புரையில், "நான்கு மாடங்கூடலின் நான்மாடக்கூடலாயிற்று. அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்; இனிக்கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம்." எனக்காரணங்கூறியுள்ளார். இந்நான்மாடக்கூடலாகிய மதுரை கல்லாடம்பாடிய கல்லாடனார் காலத்துப் பத்துக் கோயில்கள் பொருந்தியதாயிருந்தது என்று,

"வட திருவாலவாய்திருநடுவூர்
வெள்ளியம்பலநள்ளாறிந்திரை
பஞ்சவனீச்சரமஞ்செழுத்தமைத்த
சென்னிமாபுரஞ்சேரன்றிருத்தளி
கன்னிசெங்கோட்டங்கரியோன்றிருவுறை,"

என்று "ஆதரங்கூறல்" என்னும் துறையில் குறித்திருக்கிறார். இவற்றுள் திருவாலவாய் வடக்கிலிருந்ததாகவும் நடுவூரில் திருநடுவூராலயமிருந்ததென்றும் ஏற்படுகிறது. வெள்ளியம்பலமும் ஆலவாயும் வெவ்வேறு இடங்களிலிருந்தனவென்பது மேற்காட்டிய கல்லாடவரிகளால் விளங்கும். கன்னிசெங்கோட்டமென்பது மீனாக்ஷியம்மன் கோயிலேயோ அல்லது இப்பொழுதுஊர்ப்பக்கத்துள்ளதும் கண்ணகியின் பிரதிமையுள்ளதுமாகிய செல்லத்தம்மன் கோயிலேயோ விளங்கவில்லை. கரியோன்றிருவுறை என்பது சிலப்பதிகாரம், துன்பமாலையில் "நீடுநீர் வையைக்கரை நெடுமால்" என்று கூறியிருக்கும் விஷ்ணுகோயிலாகும். இக்கோயிலின் பெருமானை சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் "ஸ்ரீ இருந்தவளமுடையார்" என்றும் அடியார்க்குநல்லார் "அந்தரவானத்தெம்பெருமான்" என்றும் வர்ணித்திருக்கிறார்கள். இவ்விரு எம்பெருமான்களும் ஒரு கோயிலிலேயே எழுந்தருளியவர்களென்பது,இப்போதுள்ள கூடலழகர் கோயிலை[1] தரிசித்தவர்கட்கு நன்கு தோன்றும். இக்கோயிலின் கர்ப்பக்கிருகத்துக் கீழ்க்கட்டில் பெருமான் வீற்றிருந்ததிருக்கோலமும் மேல்மாளிகையில் நின்ற திருக்கோலமும், அதற்கு மேல்மாளிகையில் பள்ளிகொண்டதிருக்கோலமும் கொண்டிருக்கிறார். இவ்வெம்பெருமான்களுள் முதல்வரை அரும்பதவுரையாசிரியரும், இரண்டு மூன்றாவரை அடியார்க்குநல்லாரும் குறிக்கிறார்கள் போலும். இந்திரனுக்கோர் கோயிலெடுத்து அவர்க்குத்திருவிழாநடத்துவது பண்டைக்காலத்து வழக்கமென்பது சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையாலும், திருக்காளத்திப்பக்கத்துள்ள தொண்டமாநாடு

(1) இவ்வழகிய கட்டிடம் பல்லவசார்வபௌமத்தில் கட்டியகட்டிடங்களாகிய காஞ்சிபுரத்து வைகுண்டப்பெருமாள்கோயில், மாவலிபுரத்துகற்கோயில் முதலியபோல் கற்பக்கிரகம்மூன்றுமாளிகையுடைத்தாய் கூடியமட்டும்கெடாமலிருக்கிறது. மதுரையிலுள்ள கோயில்களிலெல்லாம் இது மிகப்பழையதொன்று.

(தொண்டைமானாற்றார்) என்னும் கிராமத்துள்ள கோதண்டராமீச் சுரத்து சாஸனத்து "இந்திரவிழவுக்குமாக......நெய் மேற்படி நாளைக்கு நாற்காடி எழுதாம்பு.........." என்று கூறியிருப்பதாலும் அறியலாம். இவ்வாறு இந்திரனுக்காகக் கட்டியகோயில் "இந்திரை" என்று கூறப்பட்டதென்று எண்ணவேண்டியிருக்கிறது.

து. அ. கோபிநாதராவ்.

---

ஸ்ரீ:

# பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

:o:

(சரு௦-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பிள்ளைகளுக்குத் திருத்தமாய்ப் பேசவும் படிக்கவும் கற்பித்துக்கொடுக்கவேண்டும்.

பிள்ளைகள் ஸம்பாஷணைசெய்யும்படி உற்சாகப்படுத்தவேண்டும்; ஆனால் பிள்ளைகளுக்கு அக்கம்பக்கங்களிலுள்ளவைகளும் அவர்களுக்கு நன்றாய்த்தெரிந்தவைகளுமான பொருள்களைப்பற்றியே ஸம்பாஷிக்கப் பழக்கவேண்டும்.

தமக்கெதிரிலுள்ள சாதாரணமான பொருள்களை உள்ளபடி வர்ணிக்கத் தெரிந்துகொண்டால், இப்பொழுது அநேகருக்கு இருப்பதைப்பார்க்கிலும் உற்றுப்பார்க்கும் வழக்கம் அப்பிள்ளைகளுக்கு அதிகமாய் உண்டாகிவிடும்.

அவர்கள் எழுதவும் கற்றுக்கொள்ளவேண்டும்; வாழ்நாளில் அவர்களுக்கு அவசியம் வேண்டியவைகளான கணக்குகளும் தெரிந்துகொள்ளவேண்டும்.

கிராமங்களில் சாதாரணமாக வழங்கும் கணக்கு முறைகளை முதலில் அப்பியஸிக்கவேண்டும்; பிறகு வியவஹாரத்திற்கு வேண்

டியவைகளாய் இதைப்பார்க்கிலும் சிறந்தவைகளான கணக்குகளையும் கற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு பிள்ளையும் தானே ஒரு கொம்பினாலாயினும் மூங்கிலினாலாயினும் அளவுகோல் செய்துகொண்டு அதை உபயோகப்படுத்தப் பழகவேண்டும்.

எவ்வளவு சுலபமான தேகப்பயிற்சியினாலும் கூடுமானால் உபாத்தியாயர் புதிதாகக் கற்பித்துப் பலவிதமாக விருத்திபண்ணி எப்பொழுதும் பிள்ளைகளைப் பயிற்றவேண்டும்.

தேகப்பயிற்சி செய்யும்பொழுது கட்டளைகள் எப்பொழுதும் அவரவருடைய பாஷைச்சொல்லா யிருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு அர்த்தம் தெரியாத வேறுபாஷைச் சொற்களை விலக்கிவிடவேண்டும்.

பாடசாலையின் பக்கத்தில் தோட்டமொன்று இருக்கவேண்டும். அந்தத் தோட்டத்தில் பிள்ளைகள் தாமே பலசெடிகளைப் பயிரிடவேண்டும்: அது அழகுக்காகவல்ல; செடிகள் முளைத்து வளருவதையும் அவற்றின் உருவத்தையும், அவைபோன்ற மற்றும் பலவிஷயத்தையும் தெரிந்துகொள்வதற்காகவேயாம்.

பெரிய சித்திரங்கள் எழுத முயலாவிட்டாலும், ஒவ்வொரு பிள்ளையும் சாதாரணமான ஒவ்வொரு பொருளையும் பார்த்தே அதைப்போல மேற்கோடும் உருவமும் வரையப் பழகவேண்டும்.

பாடசாலைச்சுவர் அடித்தரை அந்தந்தக்கிராமத்தில் வீதிகள் போகும்வழி, அல்லது அந்த வீதிகளின் ஒருபாகம், வயலின் உருவம் இவற்றின் பெரிய ரூபங்களைச் சிறியவையா யெழுதிக் காட்டப் பழகவேண்டும்; ஆனால் இவைகளெல்லாம் கண்ணால் பார்த்தே யெழுதவேண்டும்.

மேலும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், இராப்பகல், பருவங்கள், கிரகணங்கள், காலசுபாவம், காற்று, மழை இவைகளைப்பற்றிய சுலபமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு கலசத்தில் அடியிலே சிறிய துவாரமொன்றுசெய்து, ஒரு நிமிஷம் அல்லது ஒருமணிநேரத்தில், தண்ணீரோ மணலோ, முற்றும் ஒழுகிப்போக அதற்குள் இவ்வளவு பிடிக்குமென்று முதலில் கடிகாரத்தைப் பார்த்துச் சரிப்படுத்தி, கால அளவைக்குறிக்க 'நிமிஷயந்திரமும்' 'மணியந்திரமும்' செய்துகொள்ளவேண்டும்.

ஒரு கல்லையும் கயிற்றையும் வைத்துக்கொண்டு கடிகாரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, ஒரு மினிட்டுக்கு அறுபதுதரம் ஆட அந்தக்கயிறு இவ்வளவுநீளமிருக்கவேண்டுமென்று தீர்மானித்துப் பிள்ளைகள் பெண்டுலம் பண்ணலாம்.

பிள்ளைகளுடைய அறிவை விருத்தி செய்வதற்கு இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான வழிகளை உபாத்தியாயருக்குத் தெரிவிக்கவேண்டும்; இவைகளன்றியும் உபாத்தியாயர்கள் தாமே நூதனமாக வேறு வழிகளைக் கண்டறிந்து கற்பிக்கும்படி செய்வது இன்னும் உத்தமமானது. அப்படி ஏதாவதொன்றை ஒருவர் நூதனமாகக் கண்டுபிடித்தால், அதை விசேஷமாகக் கொண்டாடவேண்டும்.

கிராமாதிகாரத்தைப்பற்றிப் பிள்ளைகளுக்குச் சிறிதளவுகற்பிக்கவேண்டும். கிராமத்தினொழுங்குப்பாடுகளைப்பற்றிப்பிள்ளைகள் சர்ச்சைபண்ணவேண்டும்; கிராமாதிகாரிகளுடைய கடமைகளைப்பற்றியும், தபாலாபீசு ஏற்பாடுகளைப்பற்றியும், தபால் முத்திரை விஷயத்தைப்பற்றியும், கடிதங்களுக்கு மேல்விலாசமெழுதவேண்டிய விதத்தைப்பற்றியும், கடிதம் கிறுக்கும் வழியைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும். பெரியபிள்ளைகள் சிலர் மூங்கிற்பிளவும் கடிதமும் கயிறுங்கொண்டு சுலபமாய்த் தராசுசெய்து கொள்ளலாம். சரியான தராசும் குண்டுகள் அல்லது நாணயங்களும் சற்று இரவலாக வாங்கிக்கொண்டுவந்து எந்தப்பிள்ளையாயினும் களிமண்கட்டியாலாவது வேறு எந்தப்பொருளாலாவது தனக்குவேண்டிய குண்டுகள் செய்துகொள்ளலாம்.

கிராமபரிபாலன முறையாகட்டும், மற்றெந்த விஷயமாகட்டும், எல்லாவற்றையும் பிள்ளைகள் வருந்திக்கற்று ஞாபகத்தில் வைத்துக்

கொள்ளவேண்டிய அவசியமில்லாமல் சுலபமாகவே செய்து பழகி அநுபவத்திற்குக் கொண்டுவரக்கூடுமென்பதைத் தெரிவிப்பதற்காக வே இந்த விஷயங்களெல்லாம் இங்கே சொல்லப்பட்டன.

தந்திசாலை, இராஜாங்கத்து உப்புவரி விசாரணைப்பகுதி, சாராய வரி விசாரணைப்பகுதி, இருப்புப்பாதை, இருப்புப்பாதை நிலைகள், இருப்புப்பாதைக் காலவளவுப்பட்டி, பிரயாணிகளுக்குச் சீட்டுக் கொடுக்குமிடம் ஆகிய இவைகளைப்பற்றிய விஷயங்களையும் அநுபவ த்திலேயே பிள்ளைகள் தெரிந்துகொள்ளலாம்.

இவைகளில் சில விஷயங்களைப் பூகோள பாடத்தில் சேர்த்து விடலாம். பாடசாலைகள் விசாரணைசெய்வதற்குப் பரீக்ஷாதிகாரிக ளில் ஒருவராவது, வித்தியாவிசாரணைத்தலைவராவது வருவதாயிருந் தால், அத்தருணமே பிள்ளைகளுக்கு இராஜாங்கத்து வித்தியாவிசார ணைப் பகுதியின் அமைப்பைப்பற்றி நன்கு விளங்கத் தெரிவிப்பதற் கு ஏற்றசமயமாம்.

மேலும், பாடசாலைக்கு வெளியேயுள்ள பிள்ளைகளைக்காட்டிலு ம் உள்ளேயிருக்கும் பிள்ளைகள் அதிக மூடர்களாயிருப்பதை நாமே கண்டிருக்கிறோம். அதற்குப் பலபரீக்ஷாதிகாரிகள் சாக்ஷியா வார்கள். இப்படியாவதற்குக் காரணமென்னவென்றால், பாடசாலை களில் படிப்பிக்கும் விஷயங்களுக்கும், வெளியே நடக்கும் உலகவா ழ்க்கைக்கும் கொஞ்சமேனும் சம்பந்தமில்லாம லிருப்பதேயாம்.

இது மாத்திரமேயல்ல ; பாடசாலைகளில் படிப்பிக்கும் விஷய ங்களிலே கூட ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலிருக்கிறது. எப் படியென்றால், பிள்ளைகள் பாடசாலையில் சேர்ந்து கணக்குப்போட ஆரம்பிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஒருவிதமா ன அளவுள்ள அறையின் சுவர்களுக்கு ஒட்டுவதற்கு வேண்டிய கடி தத்தின் பரிமாண மிவ்வளவென்பதையும் அவர்கள் தெரிந்துகொ ள்ளுகிறார்கள்; ஆனால், சுவரில் காகிதமொட்டிய அறையை அவர்க ள் ஒருபொழுதும் கண்ணால் பார்த்ததே இல்லை.

பிறகு கணக்கு முடிந்து மற்றொரு பாடம் துவக்கப்படுகிறது. பூகோள புஸ்தகத்தைத் திறந்து அன்றைய தினத்துப்பாடம் படிக்கி

றார்கள். பிறகு வாசகப்பாடம் ஆரம்பமாகும். அதில் ஒவ்வொரு பதத்திற்கும் பிரதி பதம் சொல்லிவிடுகிறார்கள்; ஆனால் பதம் பிரதி பதம் இரண்டினாலும் குறிக்கப்படும்பொருள் இன்னதென்று தெரிந்துகொள்வதில்லை.

அப்புறம் அவர்கள் விளையாடப் போகிறார்கள். விளையாடுகையில், தாங்கள் பாடசாலையில் கற்றவையும் கற்கவேண்டியவையுமாகிய நூற்றுக்கணக்கான விஷயங்களைக் கண்ணாலே பார்க்கிறார்கள். கையாலும் செய்கிறார்கள்; ஆனாலும், தாங்கள் பாடசாலையில் கற்றதற்கும் இங்கே கண்ணாலே காண்பதற்கும் இன்னசம்பந்தமிருக்கிறதென்பதை ஒருபொழுதும் ஆலோசிப்பதில்லை.

ஒரு குழந்தை பலபூண்டுகளைக் கண்ணாலே பார்த்துத் தெரிந்துகொள்ளும்; அவை தம் வீட்டில் இன்னின்ன வேலைக்கு உபயோகமாகுமென்பதையும் அறிந்துகொள்ளும். சீக்கிரமே மழைவருமென்பதும் அக்குழந்தைக்குத் தெரியும். வீதியிலே போகிற வண்டிக்கு மைபோடவேண்டுமென்பதும், மை இன்னவிதமாகப் போடுவதென்பதும் தெரியும். இந்த விஷயங்களைப் பற்றிப் பாடசாலையில் பேசுவதேயில்லை. 'பாடசாலையாவது பரீக்ஷாதிகாரி வரும்பொழுது பிள்ளைகள் சொல்லவேண்டிய வாசகம் எழுத்து கணக்கு இவைகள் மாத்திரமே கற்பிக்கவேண்டிய இடம்' என்று நினைத்திருக்கிறார்கள்.

இதற்குக்காரணமென்னவென்றால், உபாத்தியாயர்கள் பாடசாலைப்படிப்பை வெளியே நடக்கும் உலகவாழ்க்கைக்கு ஏற்றதாகச் செய்யமுயலாமையேயாம். எல்லாவிஷயங்களும் உபாத்தியாயரையே பொறுத்தவையாயிருக்கின்றன. தமக்குத் தெரியாத விஷயத்தைக் கற்பிக்க உபாத்தியாயராலாகாது; இதுவரையில் அவர்களுக்கு ஒருவாறு தெரிந்த விஷயங்களைப் போதிக்கும்படி நிர்ப்பந்திக்கலாயிற்று. இனி அவர்களுக்கு நன்றாய்த்தெரிந்த விஷயங்களைப் பற்றிப் பிள்ளைகளுடன் சம்பாஷணை செய்யும்படியாகவும் உற்சாகப்படுத்தவேண்டும். எப்படியானாலும், எவரெவர்க்கு எந்தெந்த விஷயத்தில் விருப்பம் அதிகமாயிருக்கிறதோ அதைப்பற்றியே சம்பாஷிக்கச்செய்வது நலம்" என்பதாம்.

வித்தியாவிசாரணைத்தலைவருடைய இவ்விளம்பரம் ஆங்கிலேய பாஷையிலிருப்பதால், இத்தமிழ்நாட்டு உபாத்தியாயர்கள் பலருக்கும் நன்றாகவிளங்கும்படி முழுமையும் இங்கே மொழிபெயர்த்தெழுதலாயிற்று. ஆயினும், போதனாப்பியாசபாடசாலையில் இரண்டொருவருஷம் பழகியவர்களானாலும், பிரதம வித்தியாப்பியாச பரீக்ஷை கொடுத்த உபாத்தியாயர்களைக்கொண்டு இவ்வளவு விஷயமும் நடத்துவது அஸாத்தியமல்லவா?

## 22. துரைத்தனத்தார் திரவியஸஹாயமும் அதன் செலவும்.

இப்படித் தென்னிந்தியாவில் படிப்பு மிகவும் ஈனஸ்திதியிலிருப்பதை ஆலோசித்து அதை விருத்திபண்ணுவதற்காக இந்தியாகவரன்மெண்டார் இந்தவருஷம் சென்னைத் துரைத்தனத்தாருக்கு ($6\frac{1}{4}$) ஆறேகால் லக்ஷம் ரூபாய் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்; இந்த ரூபாயை வித்தியாவிசாரணைத் தலைவரது அபிப்பிராயத்தை யனுசரித்து லோகல்பண்டு சபையார் மூலமாக அங்கங்கே பாடசாலைக் கட்டிடமில்லாத கிராமங்களில் 400 ரூபாய்க்கு மேற்படாமல் செலவுசெய்து பாடசாலைக் கட்டிடங்கள் கட்டவும், பாடசாலைக்குப் பொருந்தாத பழைய கட்டிடங்களைப் புதுப்பிக்கவும் செலவுசெய்யும்படி சென்னைத்துரைத்தனத்தார் உத்தரவுபண்ணியிருக்கிறார்கள். அநேகம் கிராமங்களில் கிராமத்தார் பாடசாலைக் கட்டிடத்துக்குத் திரவிய சகாயத்துடன் மற்றும் வேண்டிய 'சாமான்'களும் கூலியாட்களும் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருப்பதாகவும், சிலகிராமத்தார் தாமே பாடசாலைக்கட்டிடம் கட்டிக்கொடுக்கச் சம்மதித்திருப்பதாகவும் வித்தியாவிசாரணைத்தலைவர் சொல்லுகிறார்.

(இன்னும் வரும்.)

சே. இராஜகோபாலாசாரி.

# மஹாபாரதம்.

பரங்கருணைத் தடங்கடலாகிய பகவானால், உணருந்தன்மையினால் உயர்வுபெற்று விளங்கும் உயிர்வர்க்கமெல்லாம் உள்ளவாறே கற்றுணர்ந்து விள்ளற்பாலன வெல்லாம்விண்டு கொள்ளற்பாலன வெல்லாம்கொண்டு நற்கதிபுக்குய்யுமாறு செய்யப்பட்ட சாத்திரங்கள் அட்டாதசவித்தை என்று சொல்லப்படும். அட்டாதசவித்தைகளாவன யாவை? கூறுதும்.

இருக்கு, யசு முதலிய வேதங்கள் நான்கும், சிக்கை, கற்பம் முதலிய வேதாங்கங்கள் ஆறும், புராணம்,நியாயம்,மீமாஞ்சை, ஸ்மிருதி என்னும் உபாங்கம் நான்கும், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம், அருத்தவேதம் என்னும் உபவேதம் நான்குமாகிய பதினெட்டும் அட்டாதசவித்தைகளாகும். அட்டாதச=பதினெட்டு. வித்தை=மெய்ப்பொருளை அறிவிக்கும் நற்கல்வி.

இவற்றுள்ளே, புண்ணியமயமாய், நாநாவிதமுமான புராதனகதைகளை வேதாகமப் பொருள்களோடு வேறுபடாது கூறுமியல்புடைய புராணம் ஒன்றுமே வெளிப்படை என்று யாவராலும் விரும்பிக்கற்று இலகுவில் உணர்தற்பாலது. புராணம் என்பது பழமையுடையது எனப்பொருள் படும். உலகத்தின் தோற்றமும், ஒடுக்கமும், மநுவந்தரமும், முனிவர் முதலியோர் பரம்பரையும், சரித்திரமுமாகிய ஐந்தனையுங் கூறுதலாற் புராணம் பஞ்சலக்கணம் எனவும்படும். மநுவந்தரம்-மநுக்களுக்கு அவகாசமான காலம். இப்புராணமும் பதினெட்டுவகைப்படும். அவை மச்சபுராணம், சைவபுராணம், மார்க்கண்டேய புராணம் முதலியன.

### கூர்மபுராணம்.

தோற்ற முலக மீண்டொடுங்க லுகமீர் மன்வந் தரமுனிவ<br>ராற்ற லரசர் மரபவர்தஞ் சரித மென்னு மோரைந்துஞ்

சாற்று புராண விலக்கணமென் றறிஞருரைப்பர் தவறின்றிப்
போற்று புராணம் பதினெட்டின் பெயரும் முறையிற் புகலுவாம்.

இவ்வியல்புடைய புராணங்களுள்ளே இதிகாசமென்று வழங்கப்படும் கிரந்தமும் அபேதமுற்று அடங்குவனவாகும். இதிகாசமாவது தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் சதுர்விதபுருடார்த்தங்களையும் பழங்கதைகளோடு சேர்த்தறிவிக்கும் சாத்திரம். பாரம்பரியமான உபதேசம் அமைந்திருத்தல்பற்றி இஃது இதிகாசம் எனப்பட்டது. இதிஹ+ஆசம்=இதிகாசம் எனத் தீர்க்கசந்தியாயிற்று. இதிஹம்=பாரம்பரியோபதேசம். ஆசம்=இருப்பது. இதிகாசம்எனப்படுவது பாரதம் இராமாயணம் என்னும் இரண்டுமாம். சிவரகசியம் என்பதும் சேர மூன்றாதலும் உண்டு. இந்த இதிகாசங்களுள்ளே பாரதம் என்னும் இதிகாசத்தினை விடயமாகமேற்கொண்டு எமக்குத்தோன்றிய சில கருத்துக்களை ஈண்டு உரைத்துக்காட்டுதும்.

பாரதம் என்பது பரதன் என்பவனுடைய மரபிற் பிறந்த பார்த்திவர்களைக் கதாநாயகர்களாகக் கொண்டு செய்யப்பட்ட நூல் என்று பொருள்படுகின்ற ஒரு தத்திதாந்தபதம். வேதம் முதலிய சாத்திரங்களின் சாரபாகங்களைத் தன்மாட்டுடைமையாற் பாரதம் எனப்பட்டதென்று வேறு பொருள் கூறுவாருமுளர். பரதசம்பந்தம் பற்றி வந்த தத்திதாந்தமாகக் கொள்ளுதலே தக்கதுவாகும். பரதன் என்னும் பெயரோடு விளங்கினார் பலர்! சந்திரவமிசத்திலே துட்டியந்தன் என்னும் சக்கரவர்த்திக்குச் சகுந்தலை என்பவளிடம் பிறந்து தானுஞ் சக்கரவர்த்தியாய்ப் பிரதாபமுற்று விளங்கிய பரதன் என்பவனே இங்கே கொள்ளற்குரியவன்.

இது வேதங்களின் மறைபொருள்களையும், எண்ணிலவாகிய புண்ணிய கதைகளையும் ஆங்காங்கடக்கிப் பாராசரியாகிய வியாசமுநிவர் பல சீடர்களுக்கும் உபதேசித்தது. வியாசமுநிவர், பின்னர் யாவர்க்கும் பயன்படுமாறு ஏட்டிலே எழுதி நிலைபெறுத்தல்வேண்டும் என்று கருதி இருக்கும்போது, "இதனை எழுதுதற்கு வல்லுநராகிய இலேககர் விநாயகக்கடவுளன்றி வேறில்லை" என்பதைப் பிரமதேவரால் அறிந்து அவ்விநாயகக்கடவுளைப் பிரார்த்தித்து இத

லை எழுது வித்தார். "வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்,ஏடாகமாமேரு வெற்பாகவங்கூரெழுத்தாணிதங், கோடாகவெழுதும்பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ" என்பதும் இவ்வரலாற்றினைப் புலப்படுத்தும்.

இதிகாசங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்தது. சைமினி முனிவரும் "நாநாவிதசாத்திரங்களாலும், குற்றமற்ற சொற்களாலும், குற்றமற்றபொருள்களாலும், பூர்வபக்கசித்தாந்த வாக்கியக் கோவைகளாலும், பிறவாற்றானும் சிறந்து விளங்கும் பாரதம்" என்றார். இது, வேதப்பொருள்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குதலால் "வேதசம்மிதம்" என்றும், "ஐந்தாம்வேதம்" என்றும் புகழப்படுகின்ற மேன்மையுமுடையது. அறம், பொருள் முதலியவைகளைத்திறம்பட விளக்குஞ் சிறப்புமுடையது. சகல சாத்திரங்களுக்கும் உபப்பிருங்கணமெனப்படும் உயர்ச்சியுமுடையது. உபப்பிருங்கணம் =முதனூற்பொருள்களை யாவரும் விளங்கும்படி வேண்டுஞ்சொற்பெய்து விரித்துரைக்கும் வாக்கியம். படிப்போர் பாவங்களைப்போக்குதலன்றி அவர்க்குப் புண்ணியங்களையும் ஆக்குமியல்புடையது. சுகர், மனுமுதலிய முனிவர்களாலும், தேவர்களாலும், காந்தருவராலும் வேறும் பலராலும் விரும்பிப்படிக்கப்பட்ட மேன்மையுமுடையது. "மூன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும், பன்னுமாமொழிப்பாரதப்பெருமையும் பாரேன்" என்றதும் இப்பொருணோக்கி என்க.

இத்துணைப் பெருஞ்சிறப்புடைமைபற்றி மஹா என்னும் விசேடணம் முன்வைக்கப்பட்டு மகாபாரதம் என்று யாவராலும் வழங்கப்படுகின்றது. "ஜயோநாம இதிகாசம்" என்றும் வியாசமுனிவர் கூறினர். ஜயோநாம இதிகாசம்=ஜயம் என்னும் பெயருடைய இதிகாசம். மச்சம், கூர்மம், மார்க்கண்டேயம் முதலிய புராணங்களிலும் இச்சரித்திரம் கூறப்பட்டிருக்கின்றது. மார்க்கண்டேயபுராணத்திலே பாஞ்சாலி ஒருத்திதானே பாண்டவர் ஐவருக்கும் பாரியாய் வந்ததற்கும், பாஞ்சாலியின் புத்திரர்களாகிய பாண்டவேயர் ஐவரும் இளம்பருவத்திற்றானே இவ்வுலகந்துறந்து போனதற்கும் காரணம் கூறப்பட்டிருக்கின்றது.

இப்பாரதம் வடமொழியினின்றும் பெயர்த்துத் தென்மொழியிலும் பாச்செய்யுள் வடிவமாகப் பாடப்பட்டிருக்கின்றது. பாடாந்தரஞ் செய்து பாச்செய்யுள் வடிவமாகப்பாடினோர், கடைச்சங்கப் புலவர் பெருந்தேவனார், சனியூர்வில்லிபுத்தூரர் முதலாயினோர். இவருள்ளே பெருந்தேவனார்பாரதத்திலே உரைச்செய்யுள் வருவதும் உண்டு. வில்லிபுத்தூரராலே பாரதத்துள்ள பதினெட்டுப்பருவங்களும் பாடப்படவில்லை. ஆதிபருவம் முதல் சௌப்திக பருவம் வரையில் உள்ள பத்துப்பருவங்களுமே பாடப்பட்டுள்ளன. சௌப்திக பருவத்திறுதியிலே "வினையகற்றும் பசுந்துளவோன் றுவரைநகர்த் திசைநோக்கி மீண்டான் சீர்த்திக், கனைகடற்பாரளித்தவரு மந்நகரி னறநெறியே கருதிவாழ்ந்தார்" என்று கூறி அப்பருவத்தோடு நிற்கின்றோம் என்பதையும் ஒருவாறு புலப்படுத்தினர். அப்பாலுள்ள பருவங்களையும் பாடினார் என்பதுமுண்டு. அதற்குத்தக்கனவாகத் தோன்றும் சான்றுகள் வேண்டும்.

இந்தப் பாரதமே செந்தமிழ் நாட்டிற் பலராலும் பாராட்டிப் படிக்கப்படுகின்றது. இது வடமொழியிலுள்ள பலவகை நூல்களின் பழக்கங்கொண்டே பெரிதும் விளக்கம் பெறற்பாலது. இங்குக் கொள்ளப்பட்ட பாச்செய்யுளாகிய விருத்தசமூகங்களுள்ளே அங்கங்கமைக்கப்பட்டிருக்கும் உத்தம வண்ணங்களும் எத்தனையோ பல! அவற்றுள்ளும் வடமொழி நூல்களிலே ஆங்காங்கு வரும் உத்தம், அத்தியுத்தம், பிரகிருதி, விகிர்தி, சங்கிருதி முதலிய சந்தங்கள் அமைந்து வந்த விருத்தங்களும் பல! இங்குள்ள இரீதிகளாகிய போக்குக்களுள்ளே வடநூலார்மதமாய் வந்த இரீதிகளும் எத்தனையோ பல! இங்கே அமைக்கப்பட்டிருக்கும் சொற்களுள்ளே அங்கங்கே வரும் வடசொற்களும் எண்ணில்லாதன! அவற்றுள்ளும் தத்திதாந்தச் சொற்களும் எத்தனையோ பல! கிருதந்தச் சொற்களும் எத்தனையோ பல! அவ்வியயச் சொற்களும் எத்தனையோ பல! வடசொற்களையே அடிகளாகக்கொண்டு பிறப்பித்துப் பிரயோகிக்கப்பட்ட வினைச்சொற்களும் எத்தனையோ பல! வடமொழிச்சமாசரூபமாய்த் தானே வந்தமைந்த சொற்களும் எத்தனையோ பல! வியாசபாரதமாகிய முதனூற்பொருள்கொண்டு விளங்கத்தக்கவைகளும் எத்தனையோ பல!

பண்டைத் தமிழ் நூல்கள் சிலவற்றின் பொருள்கொண்டு உணர்தற் பாலனவும் பல! இன்னும் பிறவற்றானுணர்தற்பாலனவும் எத்தனையோ பல! கொள்ளற்பாலனவாகிய நீதிநெறிகளைக்கூறுஞ் செய்யுள்களும் பல!

"மாவின் பாலே யன்றி மரபுக் குரிய மைந்தன்" (வாரணாவதம். சரு) "மாவின் பால்=மாவோடுநீர் சேர்ந்தாக்கியபால். இதனை முதனூலார் பிஷ்டரசம் என்பர். "முத்திமுனி தாளிணையை நீர்படி தடந்துறையின் முதலைகவர்வுற்ற தெனலும்" (வாரணாவதம். ருஉ) "தண்ட ரளமலை வெண்க யிலைமலை சங்க மலையென நங்கைமார்" (வேத்திரகீயம்-சஅ) "மாயாசர கூடமறைத்திடலால் வலையுட்படு விரம டங்கலென" (பதினேழு-உ0ரு) "மூகுராசனன் மைந்தனும் வீமனுமே முடியாதபெரும்பகை யாளர்கள்காண்" (பதினெட்டு-கக௲) என்பவை முதலியன வடமொழிச் சந்தங்கள் அமைந்து வந்த விருத்தங்கள். முத்திமுனி எழுவாய்; வேறு வேற்றுமை கொள்ளப் படுமாயின், துரோணாசாரியர் மாணவர்களோடுஞ் சென்று ஸ்நானஞ் செய்யும் கங்காநதித்துறையிலே தம்முடைய காலின்கண் முதலைபிடித்தபோது அவர்களை நோக்கி "முதலையைக்கொன்று என்னை விடுவிக்கக் கடவீர்கள் என்றார்" என்னும் வியாசபாரதத்தோடு மாறுபடும். (வியாசபாரதம்-அத்தியாயம்-கசுரு.) தடந்துறை என்றது கங்காநதியிலே பலரும் வந்து ஸ்நானஞ்செய்யும் ஸ்தானவிசேடத்தை. "பூக்குமாமுத லெவனவன் பொன்னடி போற்றி" "பத்திரட்டியினீரிரண் டொழிந்த பல்கலையோன்" "விருப்புறக் கவர்ந்தேகினரவளுடன் விசும்பில்" "யயாதியென் றுகொண் டிவனையே யெவரினுஞ்சிறக்க வியாதனும் புகழ்ந்துரைத்தது" "பரதனென் றொருபார்த்திவன்" "விநதை முன்பயந்த யானம்" "மெய்க்குலத்தந்தையாம் விழைவு மில்லென்றாள்" "நாட்டமின்றுனக்கியாததுநிலை" (குருகுல-கூஎ) "எண்ணுற்றசூர னிகன்மத்திர ராசனென்ன-மண்ணுற்ற கீர்த்தி வயமன்னர் மகளிரோடும்" (சம்பவ-சசு) "நாகாதிபன் விடுமும்மத நாறுந்திசை" (அருச்சுனன்றீர். க0) என்பன முதலியவைகள் வடநூலார் மதாநுசாரமாய் வந்த இரீதிகள்.

இவற்றுள்ளே 'பத்திரட்டியினீரிரண்டொழிந்த பல்கலையோன்' என்பது பதினாறு வரையும் பொருந்துகின்ற பல்வகைக் கலைகளையு

*

டைய சந்திரன் எனப்பொருள் படும். ஒவ்வொன்றாக வளர்தலும் அவ்வாறே குறைதலுமாகிய பல்வகையுமுடைமைபற்றிப் "பல்கலை" என்றார். "யயாதியென்றுகொண்டு" என்பது "யயாதி" என்று முதலில் எடுத்துக்கொண்டு எனப்பொருள்படும். வியாசமுனிவர் எ௫-ம் அத்தியாயத்து முதலிலே "யயாதிராவலீத்" என்று தொடங்கி ௯௯-ம்-அத்தியாயம் வரைக்கும் யயாதிமஹாராஜனுடைய சரித்திரத்தைப் பரக்க விரித்துக் கூறினர். அதனை நன்கறியுங் குதூகலமுடையோர் அங்கே பார்த்துணர்க என்னுங்கருத்துடையராய் அவன் சரித்திரம் கூறும் சுலோகசமூகங்களுள்ளே முதனின்ற சுலோகத்தின் ஆரம்பமாகிய "யயாதி" என்பதனை இங்கே எடுத்துக்காட்டி முதனினைப்பித்து வழிப்படுத்தார் என்பதும் இதனாற் பெறப்படும். யயாதி என்பது அநுவாதம். இவ்வாறே "அதவா என்று எடுத்துக்கொண்டு" என்று பிறர் கூறுமாறுந் தேறுக. இந்த யயாதி என்பவன்போல ஒழிந்த மற்றையரசர்களுள் ஒருவரும் இத்துணை வித்தாம் பெறப் புகழ்ந்துரைக்கப்பட்டிலர் என்பதும், இவன் எவரினும் விசிட்டமாக உத்தரசரித்திரத்தாலும் புகழ்ந்துரைக்கப்பட்டுளான் என்பதும் "இவனையே" என்புழிப் பிரிநிலையேகாரத்தானும் "எவரினுஞ் சிறக்க" என்பதனானும் பெறப்படும். உரைத்தது என்பது திணைபாலிடங்கட்குப் பொதுவாய் நின்று காலங்காட்டுவதோர் தொழிற்பெயர். பின்னர்ப் "பாவலனமைத்தது" "தேசின் மிக்கவர்ச் சேர்வது" "ஆலயம் வகுத்தது" என்றவைகளும் இம்முடிபின. காண்டவதகனத்திலே வரும் "என்று கொண்டுரைத்த மொழி" (௫௯) என்பதற்கும் இவ்வாறுரைகூறல் இயையும்.

"பரதனென்றொரு பார்த்திவன்" என்பது பரதன் என்று பிரசித்தி பெற்ற ஓரரசன் என்று பொருள்படும். "விநதைமுன் பெற்ற யானம்" என்பது விநதை என்பவள் முன்னர்ப் பெற்ற கருடனாகிய வாகனம் என்று பொருள்படும். விநதை=தக்கன் புத்திரிகளுள்ளே ஒருத்தி. கருடன் முதலாம் பிள்ளையாதல் பற்றி "முன்பெற்ற" எனவும் ஏறிச்செல்லுதற்கு ஏற்றசாதனமாதல் பற்றி "யானம்" எனவும் கூறினர். "மெய்க்குலத்தந்தையாம் விழைவுமில்லென்றாள்" என்பது மெய்ம்மையுடைய குலத்திலே ஒருவற்குத் தந்தை

யாதற்குக் காரணமான விருப்பும் இவனுக்கு இல்லையென்றாள் எனப் பொருள்படும். இவன் இல்லொழுக்கிற் செல்வதில்லையென்றவாறு. "நாகாதிபன் விடுமும்மதநாறுந்திசை" என்பது கிழக்குத்திசை எனப்பொருள்படும். இவ்வாறு வருவனவெல்லாம் பரியாயோக்தி என்னும் அலங்காரத்தின் பாற்படும். மற்றைய வெளி.

இங்கே வடநூற் சந்தமமைந்து வந்த விருத்தங்களுள்ளே சில சில விருத்தங்களும், வடநூற் போக்கமைந்த பாகங்களுள்ளே சில சில பாகங்களும் கூறப்பட்டன. இனிக் கூறப்படுவன தத்திதாந்தச் சொற்களும் பிறவுமாம்.

குந்தி, திரௌபதை, குருக்கள், மத்திரி, அம்பிகேயன், பாஞ்சாலி, ஆநிலி, ஆதித்தேயர், காத்திரவேயர், தார்த்தராட்டிரர், மாத்திரி, சாத்யகி, மாதவி, யாதவி, மாருதி, ராவணி முதலியன தத்திதாந்தச் சொற்களாகும். தத்திதம்=பிராதிபதிகத்தின்மேல் வரும் பெயர் விகுதி. பிராதிபதிகம்=பெயர்ப்பகுதி.

இவற்றுள்ளே குந்தி என்பதைப்பற்றி சற்று விரித்துக்கூறுதும். குந்தி என்பது ஒரு தேசத்தின் பெயர். இத்தேசத்திற்கு அரசன் என்னும் பொருளையும், இவ்வரசன் புத்திரி என்னும் பொருளையும், இவ்வரசன் பூமி என்னும் பொருளையும் உணர்த்தும்படி இக்குந்தி என்னுஞ் சொல்லின்பின் வரற்பாலதாகிய தத்தித விகுதி கெட்டு நிற்கும். கெட்டு நிற்பினும் கெடாது நிற்கும் பொழுதைப் பொருளை உணர்த்தும் என்பதும், புத்திரி என்னும் பொருளில் ஈகாராந்தமாய் நிற்கும் என்பதும் வையாகரண சித்தமாகும். ஆகவே குந்தி என்பது தேசவிசேடத்தையன்றி குந்திதேசராசனையும், குந்திதேசராசன் புத்திரியையும், குந்திதேசராசனுடைய பூமியையும் உணர்த்தும் என்பது ஒரு நிலையாகும். குந்திதேசராசன் குந்தி என்றன்றிக் குந்தி போசன் என்றும், போசன் என்றும் வழங்கப்படுவன். குந்தி என்று வழங்கப்படுதலைப் பாகவதத்திலும், போசன் என்று வழங்கப்படுதலைப் பாரதசம்புவிலும், குந்தி போசன் என்று வழங்கப்படுதலை ஈண்டுங் காண்க. "அணிமாடக் குந்தி போசன் மாமடமகள்" (சம்பவ. அ) என்பதையும் நோக்குக. குந்தி போசன்

என்பது குந்தி எனப்படும் போசன் எனவிரியும். அணிபாடம் எ ன்பது அவன் பெயர்க்கு மூலமாய் அதனோடு கூடி அபேதமாய் நின் ற தேசத்தை விசேடித்துச், சிவகசிந்தாமணியிலே வரும் "குருதிக் கோட்டுக் குஞ்சரநகரம்" என்புழிப்போல ஒட்டி நின்ற ஒரு விசே டணம். ஈண்டுக் குந்தி என்பதனை அவன் தேசம் என்றாவது பூமி எ ன்றாவது கொள்ளலும் பொருந்தும்.

இந்தக் குந்தி என்பவனுக்கு மகள் என்னும் பொருள்படக் குந் தி என்னும் நாமதேயம் பெற்று நன்கு விளங்கிய நங்கைதான் தரும ன் முதலிய பாண்டவருடைய தாய் எனப்படுவள். இவள், யதுகுல சிரேட்டனாகிய சூரன் என்பவனுடைய புத்திரி. யது குலசம்பந்த ம் பற்றி "யாதவி" எனவும் வழங்கப்படுவள். "பிருதா" என்பது தான் இவளுக்குப் பெற்றோராலிடப்பட்ட பிள்ளைத்திருநாமம். குந் தியென்பது, தந்தையாகிய சூரன் என்பவனாலே மக்கட்பேறில்லாத அந்தக் குந்தி போசனுக்குத் தத்தபுத்திரியாகக் கொடுக்கப்பட்டு அ வன் வீட்டில் வந்து அவனால் வளர்ந்த காரணம் பற்றி வந்த சிறப்பு ப் பெயர். இவ்வரலாறு கூறுங் கவியையும் ஈண்டுக் கூறுதும்.

புந்தி யாலருங் கலைமகள் பொற்பினாற் பூந்திருப் புனைகற்பால்
அந்தி வாயருந் ததிபெரும் பொறையினா லவனிமா னிகரென்னக்
குந்தி போசனிற் சூரனென் பவன்மகள் குருகுலந் தழைத்தோங்க
வந்தியாவரும் பிருதையென் றடிதொழ மதியென வளர்கின்றாள்.
(சம்ப. உரு)

இதனைச் சூரனென்பவன்மகள் குருகுலந்தழைத்தோங்கக், கு ந்திபோசன் இல்வந்து, யாவரும் பிருதைஎன்று அடிதொழ, புந்தி யாலருங்கலைமகள், பொற்பினாற்பூந்திரு, புனைகற்பால்அந்திவாயரு ந்ததி, பெரும்பொறையினால் அவனிமானிகரென்ன, மதியென, வளர் கின்றாள் என மாறிப் பொருள் கொள்க. சூரனென்பவன் மகள் ஓ ங்க, வந்து, அடிதொழ, நிகரென்ன, மதியென வளர்கின்றாள் என முடிக்க. ஓங்க காரியப்பொருட்டு. தொழ உடனிகழ்ச்சி.

குந்தி போசன்இல் வந்து=குந்திபோசராசனுடைய வீட்டிலே வந்து. இல்-வீடு "தாதையிற்சென்றாள்" என்றதையும் நோக்குக. குந்திபோசனுடைய இல்லின்கண் வந்து வளர்ந்தவாறென்னையோ?

என்னும் அவாய்நிலையான் "எனக்கு முதற்பிறக்கும் குழந்தையை உனக்குத்தருவேன்" என்று தான் செய்த பிரதிஞ்ஞை தவறாது தந்தையாற் கொடுக்கப்பட்டுத் தத்தபுத்திரியாய் அவன்பால் அமைந்து வளர்கின்றாள் என்னும் கதை வந்தமையும், அவனுக்குப் புத்திரியாய் அவன் வீட்டிற்கு வருகை, அங்கே வருகின்ற அதிதிகளை ஆதரித்தலாகிய விருந்தோம்பலிலே நிலைபெறற்கும், அந்த அதிதிபூசையினாலே ஆண்டு வந்த துருவாசமுனிவரை மகிழ்வித்தற்கும், அம்முனிவரிடத்திலே யாவராயினும் விரும்பியதேவரை வருவித்துத் தக்க மக்கட்பேறடைதற்கேற்ற மந்திரோபதேசம் பெறுதற்கும், அம்மந்திர வலியினாலே "தருமன் பவனன் றினநாதன் தனயர்" இந்திரன் என்னும் ஐந்து தேவர்களையும் வருவித்துக் குருகுலதீபங்களாய் விளங்கிய தருமன்முதலிய ஐந்துமைந்தர்களையும் பெறுதற்கும் பரம்பரையிற் காரணமாய்க் குருகுலந்தழைத்தோங்குதற்குப் பெரியதொரு காரணமாயிற்று என்பது போதரக் "குருகுலந்தழைத்தோங்க வந்து" என்றார்.

இப்பொழுது குந்திபோசனுக்கே மகளாய் விளங்கினும் யதுகுலத்திற்கும் ஒரு முதல்வி என்று வணங்கினார்கள் என்பது போதர குந்தி என்னாது உடம்பொடு புணர்த்தலாய் "பிருதை என்றடி தொழு" என்றும், விரைந்து சிறந்து வளர்கின்றாள் என்பது போதர "மதியென" என்றும், எளிதின் வளர்க்கப்படுகின்றாள் என்பது போதர "வளர்கின்றாள்" என்றுங் கூறினார்.

"பிருதா" என்னும் வடசொல் "பிருதை" என்று தற்பவமாயிற்று. இங்கே "குந்திபோசன்" என்று கொள்ளும் பாடமும், "பிரதை" என்று கொள்ளும் பாடமும் பொருந்துவனவல்ல. பொருந்துமாறுளதென்புழி வாங்கினேன் குந்திபோசன் ஒருவனே என்பதும், சூரனென்பவன் தேவகனுக்கு மைந்தன் என்பதும், பார்த்தன் என்புழிக் கொள்ளப்படும் பகுதியாகிய முதனிலை "பிருதை" என்பதும் கூறப்படும். இனிக்கூறப்படுவன எஞ்சிய தத்திராந்தங்களும் பிறவுமாம். (வரும்.)

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

# பத்திராசிரியர் குறிப்பு.

## 1. கீரிக்கதை.

சென்ற பகுதியில் ஸ்ரீ. S. சாமிநாதையரவர்கள் "பஞ்சதந்திரம்" என்னும் தலைப்பின்கீழ் எழுதிய விஷயத்தே, பிரகத்கதை "கட்டுக்கதையென்றும், உண்மையில் தென்னிந்தியாவில் உலாவிவந்த கதைகளை ஒருவர் திரட்டிப் பைசாசபாஷையில் பெருங்கதை என்ற பெயருடன் எழுதிவைத்தனரென்றும், இப்பெருங்கதையின் சுருக்கமே கதாசரித்சாகரமென்றும் நம் நாட்டுச் சரித்திரகாரராகிய ஸ்ரீ: ராமேசசந்திரதத்தர் கூறுவர்" என்று எழுதியுள்ளார்கள். இங்ஙனம் ஸ்ரீதத்தர் கூறியவாறே, இக்கதைகள் முற்காலத்தில் தமிழ் நாட்டிலே வழங்கிவந்தவையென்பதற்குத் தக்கசான்றொன்று காணப்படுகின்றது. பார்ப்பனியொருத்தி தன்குழந்தைக்குக்காவலாகத் தன்னால் வளர்க்கப்பட்டுவந்த கீரியைத் துணைவைத்து நீராடச்சென்றாளாக, அக்கீரி குழந்தையைக் கடித்தற்குச் சீறிவந்த பாம்பொன்றைக் கௌவித்துணித்து அத்துணித்தவாயுடன் அம்மகிழ்ச்சியைக் குறிப்பிக்கும்பொருட்டு பார்ப்பனியை எதிர்கொண்டுசெல்ல, எதிர்ப்பட்டஅவள் கீரியைக்கண்டு 'இது தன் குழந்தையையே கடித்து வந்தது' என்று நடந்ததறியாமலே சினந்து, அதனைப் புடைத்துக்கொன்றாள்" என்ற கதை பலவிடத்துமுள்ளதுபோலவே, பிருகத்கதைச் சுருக்கமாகிய கதாசரித்சாகரத்திலும் பஞ்சதந்திரத்தும் காணப்படுகின்றது. ஆனால், இக்கதை, காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் காலத்தில் நிகழ்ந்ததாகச் சிலப்பதிகாரம் அடைக்கலக்காதையில் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு:—

"பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரும் மாமறை யாளன்
கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகம் வைத்தனல் லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்

கருமக் கழிபலங் கொண்மி னோவெனும்
அருமறை யாட்டியை அணுகக் கூஉய்
யாது நீ யுற்றவிடர்? ஈதென்? என
மாதர்தான் உற்ற வான்றுயர் செப்பி
இப்பொரு ளெழுதிய இதழிது வாங்கிக்
கைப்பொருள் தந்தென் கடுந்துயர் களைகென
அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன்
நெஞ்சுறு துயரம் நீங்குக என்றாங்கு
ஓத்துடை அந்தணர் உரைநூற் கிடக்கையிற்
றீர்த்திரம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவள் தன்றுயர் நீக்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ!''

இவ்வடிகளிலே, அப்பார்ப்பனியுடைய கணவன், வளர்த்த கீரியைத் தன்மனைவி பழிநோக்காதுகொன்றாள் என்பதுநினைந்து, அப்பெரும்பாவம் புரிந்தவளுடன் வாழவொருப்படாமல் ஒரு வடமொழிச் சுலோகத்தை எழுதி * அவள்கையிற்றந்து தான் கங்கையாடச் சென்றானென்றும், அச்சுலோகத்தைப் பெற்றுக் கணவனைப்பிரிந்த பார்ப்பனி அதன்பொருள் தெரியவேண்டிப் புகார்நகரிலுள்ள தெருவில் திரிந்துவருந்தும்போது கோவலன் அவளைக் கண்டு நடந்ததனைத்துங்கேட்டு அவள் பாவத்தைப் போக்கற்குரிய கழுவாய் செய்வித்து அவள் கணவனையுந் தருவித்து, முன்போல அவ்விருவரையும் வாழவைத்தானென்றும் கூறப்பட்டிருத்தல் காண்க. இளங்கோவடிகள், கோவலனுடன் தொடர்புபடுத்துக்காட்டிய இக்கதை அவன்காலத்தே நிகழ்ந்ததேயா? அன்றித் தம் காப்பியத்தை அழகு பெறுவித்தற்காகப் பிறிதொன்றினின்று எடுத்துச் சேர்த்ததா? என்னும் ஐயம் இங்கே நிகழத்தக்கது. அதனை இப்போது முடிவுபடுத்தல் அருமையாயினும், இக்கீரிக்கதைபோன்ற வ

* அவ்வடமொழிச் சுலோகமாவது:— [illegible] என்பர் அடியார்க்கு நல்லார்.

டநூல்களுட் காணப்படுங் கதைகள் பல, முன்னாளில் தமிழ்நாட்டில் வழங்கிவந்தனவே என்பதில் ஐயமின்று. பைசாசபாஷையிலிருந்த பிரகற்கதை முற்காலத்தே "பெருங்கதை" என்னும் பெயருடன் தமிழில் இயற்றப்பட்டிருந்தது என்றுந்தெரியவருகிறது. இப்பெருங்கதை "கொங்குவேள்" என்பாரால் செய்யப்பட்டதென்றும் அதுபற்றிக் "கொங்குவேண்மாக்கதை" என்னும் பெயரும் அதற்குண்டென்றும் தொல்காப்பியச் செய்யுளியலுரையாற் கருதப்படுகிறது.

---

## 2. எதிராச ரந்தாதி.

இப்பெயருடன், ஆழ்வார் திருநகரியினின்று கிடைத்த ஏடொன்றில், பத்துக்கலித்துறைகள் காணப்பட்டன. இதன்கண்ணுள்ள விசேடமென்னவெனில், திருவருளாளரும், திவ்யகவியுமாகிய ஸ்ரீ: பிள்ளைப்பெருமாளையங்காரால் இது பாடப்பெற்றது என்று அவ்வேட்டிலும், ஈற்றுச்செய்யுளிலும் காணப்படுவதேயாம். இதன் வாக்கு, நிருபமாக அமைந்து, பழமைபெருமை காட்டுகின்றது. இது, மேற்குறித்த திவ்வியகவியின் வாக்காதலாலும், உடையவரென்றும் எம்பெருமானார் என்றும் வழங்கும் ஸ்ரீஇராமாநுஜரது வைபவத்தைக் குறிப்பதாதலாலும், பலர்க்கும் இன்பந்தருமென்று கருதி அப்பாடல்பத்தையும் ஏட்டிலுள்ளபடியே கீழேதருகின்றேன்.

### நூல்.

பூமான் பிறந்து சிறந்தது வேலை புவிபடைத்த
கோமான் பிறந்து சிறந்தது நான்மறை கூடற்சங்க
நாமான் பிறந்து சிறந்தது பண்டெதி ராசனென்னுஞ்
சீமான் பிறந்து சரணு கதியுஞ் சிறந்ததுவே. (க)

சிறந்தது செல்வஞ் சிறவா ததுகலி சில்சமய
மறந்தது மாதவன் பேர்வாழ்த்த வைகுந்த மன்னுமுனி
திறந்தது வாசல் திறவா நரகந் தெரிந்தவையம்
பிறந்தது பூதூர்ப் பிறவாமுனிவன் பிறந்த பின்னே. (உ)

பின்னே தொடரும் பிறவிப் பெரும்பிணி பேர்க்கும்வண்ண
மின்னே யிதற்கு மருந்தறிந் தேனிந்த மேதினியிற்
றன்னே ரொருவரொவ் வாவெதி ராசன் சரணமென்று
சொன்னே னறிந்திலே யேமன மேயிந்தத் துக்கம்விட்டே. (ஙூ)

விட்டது தீவினை மாண்டது கோபமெய்ஞ் ஞானநெஞ்சிற்
பட்டது வேறு பரவச்சந் தீர்ந்தது பாவமெல்லாங்
கெட்டது வீடு தருமென்று கேசவன் றுடலைமே
விட்டது வெங்க ளிராமா நுசனென் றிருப்பவர்க்கே. (௪)

இருக்கும் பொருளு மறிவின் பொருளு மெழுத்தெட்டினு
ளுருக்கும் பொருளு முணர்வின் பொருளுமொன் றுகவெல்லாஞ்
சுருக்கும் பொருளுந் துணிவின் பொருளுந் துணிந்தபின்பு
செருக்கும் பொருளு மெதிராச ராசன் றெரிந்தபின்னே. (ரு)

தெரியாத வாதியர் தேற்றவிட் டேதிரு வெட்டெழுத்தி
னுரியா ரருள்பெற வேண்டெதி ரேயுடு வும்பிறையும்
பிரியா மதிட்பெரும் பூதூர் முனிசொன்ன பேச்சைநெஞ்சிற்
றரியா தவரறி யாரினி வேறில்லைச் சத்தியமே. (சு)

சத்தியத் தின்பொரு டத்துவத் தின்பொரு டன்னிலுன்னும்
புத்தியத் தின்பொருள் புண்ணியத் தின்பொருள் பூசுரர்தம்
பத்தியத் தின்பொருள் பற்றறுக் கும்பொருள் பற்றறுத்தால்
முத்தியத் தின்பொருள் பூதூர் முனிவன் மொழிந்தபின்னே. (எ)

மொழிக்கே கரும்பையுந் தேனையும் வைத்தந்த மொய்குழலார்
விழிக்கே யகப்பட் டுழலுகின் றீர்கள்மெய்ஞ் ஞானநெஞ்சிற்
சுழிக்கே கொழிக்கும் யமுனைத் துறைமுனி சொல்லச்சொன்ன
வழிக்கே வினையுங் கெடீரெதி ரேவரும் வைகுந்தமே. (அ)

வையகத் தேதன்னை வள்ளலென் றேத்தினும் வாய்திறவாக்
கையகத் தேநின்று கண்குளிர் வீர்கரு ணாகரனை
மெய்யகத் தேவைத்த பூதூர் முனிதன் விரைமலர்த்தாள்
பொய்யகத் தேநிற்கி லும்மக லாண்மணப் பூமகளே. (கூ)

சந்தார் புயத்தெங்க ளாழ்வார் தமக்குந் ததியருக்கு
மந்தாதி பத்து மணவாள தாத னலற்றியதால்
நந்தாத குற்றமுண் டாகா தவர்க்கொரு நாய்கங்கைநீர்
தந்தாபந் தீரக் குடித்தாலுந் தீர்த்தத்திற் றாழ்வில்லையே. (௰)

முற்றும்.

## 3. தென்னாட்டுப் பழையவழக்கங்கள்.

போதாயன சூத்திரத்திலே, தென்னாட்டுப் பார்ப்பாரது பழையவழக்கங்கள் சிலவிவரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் குறிக்கும் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு வருமாறு:—

க. வடக்கினுந் தெற்கினுமுள்ள ஐந்து வழக்கங்களைப்பற்றிய விவாத மொன்று உண்டு.

உ. தெற்கணுள்ள வழக்கங்களைப் பற்றி விவரிப்போம்.

ங. யோக்கியதையில்லாதார் கூட்டத்திருந்து உண்பதுண்டு; பழஞ் சோறு உண்பதுண்டு; தாயுடன் பிறந்தானுடைய அல்லது தந்தையுடன் பிறந்தாளுடைய மகளை மணம்புரிவதுண்டு.

ச. இனி, வடநாட்டார்க்கேயுரிய வழக்கங்கள்:—(கம்பளி) மயிர்வியாபாரஞ் செய்தலும், மதுவுண்டலும், இருவரிசையினும் பல்லுடைய விலங்குகளை விற்றலும், ஆயுதவியாபாரஞ் செய்தலும், கடற்பிரயாணம் பண்ணலும் ஆம்.

ரு. இவ்வழக்கங்கள் எங்கெங்கு நடைபெறுகின்றனவோ அவையல்லாவிடங்களில் இவற்றை அனுசரிப்பானாயின், அவன் பாவஞ்செய்தவனாவான்.

சு. ஒவ்வொரு வழக்கத்துக்கும் அவ்வந்நாட்டுச்சட்டமே பிரமாணம்.

எ. கௌதமர், இவையனைத்தும் குற்றமுடையன என்று கூறுகின்றார்.

இவற்றுள்ளே, தாயுடன் பிறந்த மாமன்மகளை மணம் புரியும் வழக்கத்தைப்பற்றி ஸ்ரீ இராகவையங்காரவர்கள் எழுதியிருப்பன:— கம்பர் 'நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்' என்புழி, மகட்கொடுத்தானை 'மாதுலன்' என்னும் பெயரால் வழங்கினர். மாதுலனென்பது வடமொழியுள் தாயுடன் பிறந்தானுக்காவது. தாயுடன் பிறந்தானை மகட்கொடுத்தல் தமிழ்நாட்டுத் தொன்றுதொட்ட வழக்கம். "கண்போன்ற மாமன் மகள்கண்மணிப்பாவையன்ன" எனச்சிந்தாமணியில் வருதலானும் உணர்க என்பது. வடநாட்டார்க்கில்லாத தாயுடன்பிறந்தான் தந்தையுடன்பிறந்தாள் மக்களை மணம் புரியும் வழக்கம் இந்நாட்டின் மட்டுமன்றி, பஞ்சதிராவிடரைச்சார்ந்த, தக்ஷணதேசஸ்தர் கௌடப்பிரமணர்க்குள்ளும் இன்றும் உண்டென்பர்.

# T. R. Tawker & Sons,

*Mount Road, Madras.*




B. 159. பிரதி மாதங்களுக்கும் தேதிகாட்டும் காலண்டர் பெண்டெண்டு. பொன்னால் செய்தது விலை ரூ. 25முதல் 50வரையில.



S. 273. வெகு அழகாகவும், வேலைபாடுள்ளதுமாகிய வெள்ளியினால் செய்த போட்டோபிரேம விலைரூ.50-முதல் 60-வரையில.



B. 19. சரியான காலங்காட்டக்கூடியதுமான லீவா வெள்ளி கைகெடிகாரம் தலைச்சாவி உள்ளது. அழகு வாய்ந்தது விலை ரூ. 45.



J. 1053. காசிமாலை யெங்களிடம் அநேக விதமான புதியமாதிரிகள் இருக்கின்றது. வேண்டுபவர்களுக்கு தயார் செய்து கொடுக்கப்படும். விலை மாதிரி முதலிய விபரங்களை தபால் மூலமாய் யெழுதினால் தெரிவிக்கப்படும்.

J. 1021. சமமல் ஜதை 1க்கு வைரத்தினால செய்தது விலை 1000-முதல் 2000-வரையில் பட்டை கெம்பில் விலை 250 முதல் 450-வரையில் சாதா கெம்பில விலை ரூ. 100-முதல் 200-வரையில.



S.T. 1. பொன் ஷர்ட் பொத்தான விலை ரூ. 20-முதல் 30-வரையில கிடி வெள்ளியில் ரூ. 5.



J. 1037. வைர மூக்குத்தி திருவாணி விலை ரூ. 200-முதல 300-வரையில்.



J. 1039. வைரங்களினால் செய்த மூக்குத்தி விலை ரூ. 300-முதல் 500-வரையில்.



J. 866. பொன்னால் செய்த ஷர்ட் பொத்தான விலை ரூ. 26-முதல் 36-வரையில் கிடி வெள்ளியில் ரூ. 4.

---

யெங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்கள் ரொக்கத்திற்கு வாங்குபவர்களுக்கு 100-க்கு ரூ. 10-வீதம் தள்ளிக் கொடுக்கப்படும்.

**டி. ஆர். டாகர் அண்டு ஸன்ஸ்.**

# T. R. Tawker & Sons.

## Mount Road, MADRAS.

வைரம், கெம்பு, பச்சை, முதலிய நவரத்தினங்களினால் அருமையான வேலைப்பாடுள்ள நகைகள் எங்களிடம் தயாராய் இருக்கின்றன நகைகளின் மாதிரி வேண்டுபவர்களுக்குத் தபால்மூலமாய் அனுப்பப்படும்.

எங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்கள் வாங்குபவர்களுக்கு 100-க்கு -வீதம் தள்ளிக்கொடுக்கப்படும்.


M. M. 4.

ஒரு நாளைக்குச் சாவி கொடுத்தால் 400 நாளைக்கு ஓடக்கூடிய கெடியாரம்.

இது வெகு வேலைப்பாடுள்ளது. அழகான டயல் உள்ளதும், சரியான காலங்காட்டக் கூடியதும், சாமான்களெல்லாம் உயர்ந்த கிலிட்டுக் கொடுத்ததும் மேலே கண்ணாடி மூடியுள்ளதுமானது. அழகும் ஆச்சரியமும் வாய்ந்தது. விலை ரூபா 45.

டி. ஆர். டாகர் அண்டு சன்ஸ்.

(No. 3.)

# THE TEST OF TIME!

## FOR OVER THIRTY SEVEN YEARS

# SCOTT'S EMULSION

*has stood every rigid test that learned Physicians could suggest.*

As a result, to-day, it is used the world over, as the Standard Remedy for

**LUNG TROUBLES,**
**COUGHS,**
**COLDS,**
**LOSS OF FLESH,**
**POOR APPETITE.**

**and as a Tonic and Tissue Builder for both Father and Son.**

---



**Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!**

NOT TOUCHED BY HAND.

---

*FOR SALE AT ALL CHEMISTS.*

---

SCOTT & BOWNE, LTD.,

MANUFACTURING

CHEMISTS,

LONDON, ENGLAND

---

(No. 1.)

# CHAMBERLAIN'S COUGH REMEDY.

## இருமலுக்கு சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.




இது,

இருமல், சீதளம், சளிமாந்தம்,

நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல்

முதலான தொண்டை, மார்புவியாதிகளை

எல்லாம் நீக்கும்.

இருமல் விஷயத்தில் அசட்டையாயிருக்கலாகாது. அது அபாயத்துக்கிடமான நோய். அது, கபவாதசுரம், இரத்தகாசம, க்ஷயரோகம் முதலியவைகளில கொண்டுவிடும்.

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த இருமல் மருந்து, நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் களிப்புண்டாக்கும் இருமலையும போக்கும. நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல சுவாசம் சாதாரணமாய்ப்போக வரச் செய்யும். இரவில இருமலின உபத்திரவத்தைக் குறைக்கும்; நித்திரையைக்கொடுக்கும.

சேம்பர்லேன் துரை செய்த இருமல் மருந்தில் அபினி கலட்பிலலே.

☞ இது, மூலிகைமயமான மருந்து

கைபடாமல் செய்த மருந்து

எங்கும் கிடைக்கும்,

சின்ன புட்டி ரூ. 1—0—0     பெரிய புட்டி ரூ. 2—0—0